ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 — விக்கிரம வருஷ பங்குனி மீ — கதிர் 9

ஏப்ரல்-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
அன்றாட உலகம்	—	10
புகழ்	— "தேவகவி"	15
திருக்குறளும் விவிலியமும்	—ரெவரெண்ட் ஜி. பி. சார்லஸ் B. D.	16
ஜெர்மனியின் பலக்குறைவு	— மு. துரைசாமி	21
பீஷ்மன்	— (நாடகம்) வெ. சா.	28
இந்தோ பர்மா பிரச்னை	— நாராயணசிவன்	33

மானிடஜாதி திருந்துவதெப்படி	— ரா. ஜி. இங்கர்சால்	45
பண்டித ஜவஹர்லால் நேரு	— "ஒரு காங்கிரஸ்வாதி"	51
தன் கையே தனக்குதவி	— வ. பார்த்தசாரதி	56
யூகோஸ்லேவியாவைப்பற்றி	—	58
கிரீஸைப்பற்றி	—	60

சந்தா நேயர்களுக்கு !

நமது சந்தா நேயர்களிற் சிலர், நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு, தங்களுக்குப் பத்திரிகை கிடைக்கவில்லையென்று எழுதுகிறார்கள். இது நமக்கு மிகவும் சிரமமாயிருக்கிறது. பிரதிமாதப் பத்திரிகையும் அந்த மாத முடிவுக்குள்ளோ அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்திற்குள்ளோ தங்களுக்குக் கிடைக்காவிட்டால் உடனே சந்தா நேயர்கள் நமக்குத் தெரிவித்தால், அதனை உடனே கவனிப்பதற்குச் சௌகரியமாயிருக்கும். அப்படிக்கின்றி, பல மாதங்கள் கழித்து நமக்குத் தெரிவித்தால் அவற்றை நாம் கவனிக்கமுடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்

மார்ச்சு

1 இன்று மகாத்மா காந்தி நைனி சிறையில் மௌலானா அபுல்கலாம் அஸாத்தைச் சந்தித்துப் பேசினார்.

அச்சு நாடுகள் ஒப்பந்தத்தில் பல்கேரியாவும் கையெழுத்திட்டு விட்டது.

பிரிட்டனுக்கு இன்று வந்திறங்கிய அமெரிக்கத் தூதரை மன்னர் பிரான் வரவேற்றார்.

இன்று இஸ்தாம்பூலில் துருக்கி ஜனாதிபதிக்கு ஹிட்லரின் விசேஷ செய்தி யொன்றைக் கொண்டு ஜெர்மன் தூதர் ஒருவர் ஆகாய விமானத்தில் வந்திறங்கினார்.

2 இன்று மகாத்மா காந்தி அலகாபாத்திலிருந்து வார்தா வந்து சேர்ந்தார்.

3 உடல் நலமில்லாமையின் காரணமாக ஸ்ரீமான் சத்திய மூர்த்தி திருச்சி ஜெயிலிலிருந்து சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்.

பல்கேரியா, அச்சு நாடுகளுடன் சேர்ந்து விட்டதைக் கண்டித்து பிரிட்டிஷ் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

இன்று இரவு சூயஸ் கால்வாய்ப் பிரதேசத்தில் ஜெர்மன் விமானங்கள் குண்டுகளை வீசின. சேதமில்லை.

பிரிட்டனுக்கும் பல்கேரியாவுக்கும் இருந்த உறவு ரத்தாகி விட்டதாகவும், தென் கிழக்கு ஐரோப்பாவில் பிரிட்டிஷார் கையாள உத்தேசித்திருந்த திட்டம் ஜெர்மனிக்குக் கிடைத்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

சென்னைக் கடன் நிவாரணச் சட்டம் செல்லு மென்று சமஷ்டி கோர்ட்டு செய்த தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய அனுமதி கோரி, இன்று சமஷ்டி கோர்டில் ஒரு மனு தாக்கல் செய்யப் பட்டிருக்கிறது.

5 இந்தியாவில், விமானத் தொழிற்சாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டு வருவதாகவும் ஆனால், பொது நன்மையை உத்தேசித்து இடத்தை வெளியிடக் கூடாதென்றும் இன்று டில்லி ராஜாங்க சபையில் ஒரு கேள்விக்கு, சர்க்கார் சப்ளை இலாகா காரியதரிசி தெரிவித்தார்.

இவ் வருஷம் சிம்லாவுக்குப் போவதில்லையென இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

யுகோஸ்லேவியாவிலுள்ள பிரிட்டிஷார் யாவரும் வெளியேறிவிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு பிரிட்டிஷ் தூதர் காரியாலயம் ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கிறது.

6 சீன விஷயத்தில் ருஷ்யா, அமெரிக்கா பிரிட்டன் இந்த தேசங்கள் எத்தகைய கொள்கையைக் கையாண்டபோதிலும் அதனால் ஜப்பானை யெதிர்க்கக்கூடிய சீனருக்குள்ள சக்தி பாதிக்கப்பட மாட்டாதென மார்ஷல் சியாங் கெய் ஷேக் இன்று கூறினார்.

அலகாபாத்தில், தாம், சர். சாப்ரு முதலியோரைச் சந்தித்துப் பேசியதுபற்றி யாதொரு விசேஷமும் கற்பிக்கவேண்டாமென மகாத்மா காந்தி இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

மகாத்மா காந்தியடிகளின் காரியதரிசி ஸ்ரீ பியாரிலால் தன்னுடைய காவல் தண்டனை பூர்த்தியான பின் இன்று விடுதலையானார்.

இந்தியாவில் மந்திரிமார்களைச் சிறையில் வைத்திருப்பதுபற்றி இன்று காமன்ஸ் சபையில் கேட்கப்பட்ட கேள்விக்கு சட்டவிரோதமான செயல்களைச் செய்ததன் காரணமாக இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயக முறையில் இவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டதனால், இவர்களது சட்டவிரோதமான செயல்களால் ஏற்படும் பலாபலன்களில்

எதுவும் மாறுதல் ஏற்படாதென்று இந்தியா மந்திரி பதிலளித்தார்.

7 சிந்து கான் பகதூர் அல்லாபக்ஷ் இன்று பிரதம மந்திரி என்ற ஹோதாவில் ராஜ விஸ்வாசப் பிரமாண மேற்றார்.

8 "நம்முடைய தேவைக்கும், ஜன நாயகத்தைக் காப்பாற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் தேசங்களுக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய போதிய உணவுப் பொருள்கள் நம்மிடம் இருக்கின்றன" என்று இன்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பேசினார்.

9 "இந்த வருஷம் முடியு முன் ஜெர்மனி யுத்தத்தை முடித்து விடும் என்பதை நான் மீண்டும் வற்புறுத்துகிறேன். சரியான பருவ காலம் ஏற்பட்டதும் இங்கிலாந்தைத் தாக்கும் வேலை ஆரம்பமாகும். இது மிகக் கடுமையான முறையில் ஈவை, இரக்க மின்றி நடத்தப் படும்" என்று ஜெர்மன் பிரசார மந்திரி கோபல்ஸ் தெரிவித்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

இன்று லாகூர் பிர்லா மண்டபத்தில் "பாகிஸ்தான் எதிர்ப்பு மகா நாடு" எல்லைப் புறக் காந்தி கான் அப்துல் கபார் கான் தலைமையில் நடைபெற்றது.

இன்று சீனத் தலைவரான மார்ஷல் சியாங் கை ஷேக் தேசீய சபைக்குச் சமர்ப்பித்த யாதாஸ்தில், சீனப் பொதுவுடமைக் கட்சிக்கும், தம்முடைய சர்க்காருக்கும் உள்ளூற மனவருத்தமான செயல்கள் நடைபெற்று வருவதைக் குறிப்பிட்டிருக்கிறார்.

10 குமாரி இந்திரா நேரு இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுவிட்டதாக லட்சுமணபுரிக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

11 அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்வதன் நிமித்தமாகக் கொண்டுவரப்பட்ட தளவாட இரவல் மசோதா இன்று பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிவிட்டது. உடனே ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அதில் கையெழுத்திட்டார்.

யுத்தக் கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் இத்தாலியர்களை இங்கிலாந்தில் விவசாயப் பண்ணை வேலைக்கு உபயோகிக்க ஏற்பாடு செய்வதாக ஒரு விவசாயிகள் கூட்டத்தில் விவசாய மந்திரியின் பார்லிமென்டரி செக்ரடெரி தெரிவித்தார்.

சோபியாவில் (பல்கேரியா தலைநகர்) பிரிட்டிஷ் ஸ்தானிகராயிருந்த ஜார்ஜ் ரெண்டல், இஸ்தம்பூலுக்கு வந்து ஒரு ஓட்டலில் தங்கியிருந்தபோது, வந்த 10 நிமிஷத்திற்கெல்லாம் ஒரு பெரிய வெடி விபத்து ஏற்பட்டது. தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

12 அமெரிக்க சர்க்கார் தளவாட இரவல் மசோதாவை சட்டமாக நிறைவேற்றி வைத்ததைப் பற்றி பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் வந்தனத்தைத் தெரிவித்துக் காமன்ஸ் சபையில் இன்று பேசினார்.

மாட்ரிட்டில் (ஸ்பெயின்) ஜெர்மன் பொருட்காட்சி சாலையை ஜெர்மன் தூதர் திறந்து வைத்தார். அப்போது ஜெர்மன் வெளிநாட்டு மந்திரியான ஸீனர் ஸூனர், ஜெர்மனிக்கும், ஸ்பெயினுக்கும் ஏற்பட்டிருக்கும் நட்பை வற்புறுத்திப் பேசினார்.

கூராஷ் பாவுவினுடைய ஸ்தாவர சொத்துக்களை ஜப்தி செய்யுமாறு இன்று அடிஷனல் பிரதம மாகாண மாஜிஸ்திரேட் உத்திரவிட்டார்.

ஜப்பான் வெளி நாட்டு மந்திரி மிஸ்டர் மத்சுவோகா இன்று இரவு பெர்லினுக்குப் பிரயாணமானார்.

இந்திய சமஷ்டி கோர்ட் நீதிபதிகளில் ஒருவரான, ஸர். சுலைமான் இன்று காலமானார்.

13 எக் கட்சியிலும் சேராத தலைவர்களின் மகாநாடு இன்று பம்பாய் தாஜ்மஹால்

ஹோட்டலில் ஸர் சாப்ருவின் தலைமையில் கூடியது.

அயர்லாந்தின் நிலைமையைப்பற்றி இன்று தலைவர் டிவேலரா பார்லிமெண்டில் பேசினார்.

14 பண்டித ஜவஹர்லால் நேரு, தேசியத் தொழில் திட்டக் கமிட்டியின் தலைவர் என்றமுறையில் அதன் தஸ்தாவேஜுகளைப் பரிசீலனை செய்ய சர்க்காரை அனுமதி கேட்டதாகவும், ஆனால் அனுமதி மறுக்கப்பட்டு விட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

அமெரிக்காவில், தற்காப்புத் தளவாடத் தொழிற்சாலைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஏற்படுவதைக் கட்டுப் படுத்துவதற்கான யோசனைகளைக் குறித்து ஆலோசிக்கப் பெற்றதாக வாஷிங்டன் செய்தி கூறுகிறது.

கூடிய சீக்கிரத்தில், ஜப்பானுக்கும் ருஷ்யாவுக்கும் ஒரு அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்படலாமென ஒரு செய்தி கூறுகிறது.

பர்மா அரிசி ஏற்றுமதி வியாபாரத்தை சர்க்கார் கட்டுப்படுத்த வேண்டுமென்று ஒரு அங்கத்தினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் பர்மா சட்ட சபையில் இன்று நிறைவேறியது.

15 பம்பாய் மாஜி மந்திரி, ஸ்ரீமான் கெ. எம். முன்ஷி தேக நிலைமை சரியில்லாததால் ஏர்வாடா ஜெயிலிலிருந்து இன்று விடுதலை செய்யப் பட்டார்.

ருஷ்யாவில் இன்று, விமான உற்பத்தி வேலையிலும், விஞ்ஞான சாஸ்திரத்திலும் நிபுணர்களாக உள்ள 15 பேருக்கு "ஸ்டாலின் பரிசுகள்" கொடுக்கப்படும் என்று மாஸ்கோ செய்தி கூறுகிறது.

16 அல்பேனியாவில் இத்தாலியத் துருப்புகள் பெருந் தோல்வி யடைந்தன.

இன்று, "ஜெர்மன் வீரர் தின விழா"வில் ஹிட்லர் பேசுகையில் ஜெர்மன் துருப்புகள் பூரண முஸ்தீப்புடன் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

17 பிரிட்டிஷ் சோமாலி லாண்டின் தலைநகரான பெர்பேராவை பிரிட்டிஷ் துருப்புகள் மீண்டும் கைப்பற்றிக் கொண்டன.

சீன, சங்கிங் சர்க்காரின் ராணுவத் தளங்கள், இப்போது பர்மாவுக்கு மாற்றப் பட்டிருப்பதாகவும், ஆனதால், இனியும் பொறுமையுடன் இருப்பது சாத்தியமில்லையென்றும், பர்மாவும் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவே கருத வேண்டியிருக்கிறதென்றும், ஹோசிஷிம்பன் என்ற ஜப்பானியப் பத்திரிகை எழுதுகிறது.

18 மகாத்மாவின் காரியதரிசி ஸ்ரீமான் பியாரிலால் இன்று இரண்டாவது தடவையாக சத்தியாக்கிரகம் செய்து கைது செய்யப் பட்டார்.

இன்று டாக்காவில் (வங்காளம்) ஹிந்து முஸ்லீம் கலகம் ஏற்பட்டது.

காலஞ் சென்ற தீனபந்து ஆண்ட்ருசுக்கு ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமெனக் கோரி மகாத்மா ஒரு வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார்.

19 டாக்டர் பட்டாபி சீதாராமையா இன்று 11-35 மணிக்கு அவருடைய வீட்டில் கைது செய்யப் பட்டார்.

துருக்கி அந்நிய நாட்டு மந்திரியான பேசர கோக்லுவை, பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியான மிஸ்டர் ஈடன் சைப்ரஸ் தீவில் கண்டு பேசினார்.

பர்மா மந்திரிச் சபையின் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியுற்றது.

அமெரிக்கா ஜனப் பிரதிநிதி சபையில், பிரிட்டனுக்கு 175 கோடி டாலர் உதவி செய்ய வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

20 இத்தாலிய-கிரேக்க யுத்தத்தில் இத்தாலியர்கள் கைப்பற்றியிருந்த டெப் பெலாணி என்ற ஊரை, கிரேக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டு விட்டன.

21 ஹாலந்தில் உள் நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

ராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதாக நாஜிகள் பயமுறுத்துகிறார்கள்.

ப்ளிமௌத் என்ற பிரிட்டிஷ் துறைமுகத்தை, ஜெர்மன் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

22 துருக்கி விஷயத்தில் தான் நடுநிலைமை வகிப்பதாக ருஷ்யா உறுதி கூறியிருக்கிறது.

23 ஜப்பானின் அந்நிய நாட்டு மந்திரியான மட்ஸுவோகா மாஸ்கோ நகரம் சென்று ருஷ்ய அதிகாரிகளைக் கண்டு பேசினார்.

பெர்லின் மீது பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

24 துருக்கி, ருஷ்யா விஷயத்தில் நடுநிலைமை வகிப்பதாக உறுதி கூறியிருக்கிறது.

25 ஜெர்மனியில் தான் சேர்ந்து கொண்டு விட்டதாக ஓர் ஒப்பந்தத்தில் யூகோஸ்லேவியா அரசாங்கம் கையெழுத்திட்டது.

இதனால் யூகோஸ்லேவியாவில் பலத்த உள் நாட்டுக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

கிரீஸ் தேசத்தில் சுதந்திர தினம் கொண்டாடப் பட்டது. இதற்கு, மிஸ்டர் சர்ச்சிலும், மிஸ்டர் ரூஸ்வெல்ட்டும் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள்.

26 ஜப்பானிய அந்நிய நாட்டு மந்திரியான மட்ஸுவோகா பெர்லினில் ஹிட்லரைக் கண்டு பேசினார்.

லார்ட் ஹாலிபாக்ஸ், பிரிட்டனுடைய யுத்த நோக்கங்களையும் சமாதான நோக்கங்களையும் விளக்கிக் கூறினார்.

27 ஆப்ரிக்காவில் ஹரார் என்ற நகரமும் கெரென் என்ற நகரமும் பிரிட்டிஷாரால் கைப்பற்றப் பட்டன.

யூகோஸ்லேவியாவின் தலை நகரான பெல்கிரேட்டில் பெரிய குழப்பம். பீட்டர் என்ற இளவரசர், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டார்.

பிரிட்டனுக்கு அமெரிக்கா உதவி செய்வதாகக் கொண்டு வரப்பட்ட மசோதாவில் மிஸ்டர் ரூஸ்வெல்ட் கையெழுத்திட்டார்.

28 யூகோஸ்லேவியாவின் பாலிய மன்னரான பீட்டரைப் பாராட்டி பிரிட்டிஷ் மன்னர் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

இந்தியாவில் மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் சுமார் இரண்டரை கோடி ரூபா மூலதனத்தோடு மைசூரில் ஒரு கம்பெனி ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

ருமேனியாவிலுள்ள யூதர்களின் நிலங்கள் யாவும் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப் பட்டிருக்கின்றன.

29 யூகோஸ்லேவியாவில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

30 மத்திய தரைக் கடலில் இத்தாலியக் கப்பற் படையொன்று, பிரிட்டிஷ் கப்பற் படையினரால் மூழ்கடிக்கப் பட்டது.

—"தேவகவி"

புகழ்

வான்புகழ் நாடி ஓடினோம்;
ஆனால் அது ஓடிக்
கொண்டே போகிறது.

ஊன் உடல் நிறைவு
போதுமென ஓடி வந்தோம்;
அதுவும் திரும்பிவருகிறது.

புகழொளி கண்டார் பலர்;
ஆனால் அடைந்தார்
ஒரு சிலரே.

உழைப்பினால், உண்மையினால், உறுதியினால்
உலகமுள்ளளவும் வாழ்ந்தார் சிலர்
ஆனால் அவர் புகழை இகழ்ந்தவரே.

ஆதலின் பிள்ளாய்! ஓடி
ஒரு கணத்தில் புகழ்
மலையை அடைய விழையாதே.

அடிமேல் அடி எடுத்துவை;
உள்ளத்திலே உறுதி கொள்
புகழ்தானே வந்தெய்தும் உன்னை.

—ரெவரெண்ட் ஜி. பி. சார்லஸ் B. D.

திருக்குறளும் விவிலியமும்

அகர முதல எழுத்தெல்லாம், ஆதி பகவன் முதற்றே யுலகு

அதாவது, எழுத்துகளுக்கெல்லாம் அகரம் முதலாயிருப்பது போல, உலகத்திற்கு ஆதி பகவனே முதலாவதாம். அல்லது, அகரம் எழுத்துக்களிலெல்லாம் முதன்மையாயிருப்பது போல், ஆதி (இது வள்ளுவரின் தாயாரின் பெயர்) அன்னை, பகவன் (இது வள்ளுவரின் தந்தையின் பெயர்) பிதா, முதல் (யாவற்றிற்கும் முதலவனாகிய) கடவுள், இவர்களே உலகினற்கு முதன்மை. "அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஔவையாரின் திருவாக்கு. திருக்குறளின் ஆதிமூலம் கடவுளே. அது போலவே விவிலியமும், "ஆதியில் கடவுள்" (ஆதியாகமம் 1:1) என்னும் முதலுரையுடன் ஆரம்பமாகிறது. விவிலியத்தின் முன்னுரை, மூலம், முடிவுரை யாவும் தெய்வமே. திருக்குறளின் ஆதி மூலமும் தெய்வமே.

மெய் அந்தணர் யாவர்? மார்க்க மாய் மாலம், மெய்யுணர்வற்ற மார்க்க ஆசாரங்கள், கோட்பாடுகள் விருதா, என்பதே திருக்குறளின் பொருள் சுருக்கம் எனக் கூறலாம்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்

எல்லா உயிர்கள் மீதும் கருணை பூண்ட அறத்தவரே மெய் அந்தணர். மற்றப்படி அந்தணர் குலத்தைச் சேர்ந்தோரனைவரும் அந்தணர் அல்ல. மேலும்,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற

மெய் அறமென்பது, மாயமற்றதாயிருத்தல் வேண்டும். மனத்தில் மாசு அற்றிருப்பதே மெய் தருமம். விவிலிய சுவிசேஷ மறையில், மலைப் பிரசங்கம் என்றழைக்கப்படும் கிறிஸ்து நாதரின் உபதேசங்களின் பொருள் சுவையும் இதுவே. "ஆண்டவரே ஆண்டவரே என்று என்னிடம் சொல்லுகிற ஒவ்வொருவனுமல்ல, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தைச் செய்கிறவனே பரலோக ராஜ்யத்திற்குட் பிரவேசிப்பான்." (மத்தேயு 7:21). மேலும், "பரிசேயர், வேதபாரகர் (எனும் அக்காலத்து அந்தணர்) என்பவர் நீதியிலும், உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் நீங்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 5: 20) வெளி வேஷம், மாய் மாலம், மாத்திரமே வீண். மெய் பக்தியும், உள்ளன்பும் அவசியம் என்பதே இதன் கருத்து.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துசால் பூன்றிய தூண்

அன்பு, ஒழுக்கம், சமாதானம், இரக்கம், உண்மை ஆகிய இவை ஐந்தும், மேலோக வாழ்வுக்குரிய நிலைகளாம்.

இவ்வாறே கிறிஸ்துவும் மொழிந்தார். ஆவியில் தரித்திரர் பாக்கியர்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. துயரப்படுவோர் பாக்கியர். அவர்கள் தேற்றப்படுவார்கள். சாந்த குணமுடையோர் பாக்கியர்; அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். நீதியின் மேல் பசிதாக முடையோர் பாக்கியர்; அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுடையோர் பாக்கியர்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமுடையோர் பாக்கியர்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுவோர் பாக்கியர்; அவர்கள் கடவுளின் பிள்ளைகள் எனப்படுவார்கள்"

(மத்தேயு 5:3-9)

"பொறுமை பூண்டார் புகழ் முடி பூண்பர்" என்பது முதுமொழி. பொறுமையுடையவர் பகஷ்டமின்றி, பகை வஞ்சமுமின்றி அன்பு அமைதி மிக்குள்ளார். ஆகவே குறளும்

> அகழ்வாரைத் தாங்கு நிலம் போலத்
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை [தம்மை

வெட்டும்போது நிலம், வெட்டுபவரை தாங்கும் அதுபோல மேன்மையான தர்மம், நிந்திப்பவரைச் சகிப்பதேயாம். மேலும்

> ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்
> பொறுத்தார்க்கு
> பொன்றுந் துணையும் புகழ்

பிறர் குற்றத்தைக் கண்டித்தவருக்கு ஒருநாள் மட்டும் சந்தோஷம். அக்குற்றத்தைப் பொறுத்தவர்களுக்கோ உலகழியு மட்டும் இன்பமேயாம். மலைப் பிரசங்கத்திலும்

நீதியினிமித்தம் இம்சை யனுபவிப்பவர் பாக்கியர். பரலோக ராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்து, இம்சைப்படுத்தி எல்லாவித தீமைகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வீர்களானால் நீங்கள் பாக்கியவான்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (மத்தேயு 5:10-12)

சத்துருக்களுக்கும் இம்சைப் படுத்துகிறவர்களுக்கும் பதிலிழைப்பது பயனில்லை.

> திறன்அல்ல தற்பிறர் செய்யினும்
> நோநொந்து
> அறனல்ல செய்யாமை நன்று

செய்யத் தகாதவைகளைப் பிறர் செய்தாலும், தான் வருந்தி அதற்கீடாக பதில் செய்வது தர்மமல்ல. மேலும்

> பகையென்னும் பண்பிலதனை ஒருவன்
> நகையேயும் வேண்டற் பாற்றன்று

பகைமையாகிய தீமையை விளையாட்டிற்காகிலும் விரும்பக்கூடாது.

> இன்னா செய்தார்க்கு மினியவே
> செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு

இம்சை விளைப்பவர்க்கும் இனிய கருமங்களை செய்யா விட்டால் அதில் பயனொன்றுமில்லை. கிறிஸ்துவும் "நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமைக்கு எதிர்த்து நிற்க வேண்டாம்; உன்னை வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு........உங்கள் சத்துருக்களிடம் அன்பு கூறுங்கள். உங்களை இம்சைப் படுத்துகிறவர்களுக்காக ஜெபியுங்கள். இப்படிச் செய்

தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளாய் இருப்பீர்கள். அவர், தீயோர் மேலும், நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கச் செய்து, நீதியுள்ளவர்கள் மேலும், நீதியில்லாதவர்கள் மேலும் மழை பெய்யச் செய்கிறார்" (மத்தேயு 5 : 39—45) எனப் பகர்ந்தார்.

மற்றவர்களைக் குற்றப்படுத்தி தீர்ப்பு செய்தால் அத்தீர்ப்பு தனக்கே வரும். இதற்கிசைய குறள்

பிறன் பழிகூறுவான், தன்பழி உற்றும்
திறன் தெரிந்து கூறப்படும்

பிறன் குற்றத்தை எடுத்துரைப்பவனது குற்றம் பிறனால் எடுத்துரைக்கப் படும். மேலும்,

தன்குற்றம் நீக்கி பிறன்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு

இறைவன் தன் குற்றத்தை மறைத்து பிறர் குற்றத்தை மட்டும் கண்டால் அதுவே பெருங் குற்றமாகும். இதற்கிசையவே மலைப் பிரசங்கத்திலும் "நீங்கள் தீர்ப்புப் பெறாதபடிக்கு நீங்களும் தீர்ப்புச் செய்யாதிருங்கள். நீங்கள் செய்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்ப்புப் பெறுவீர்கள். நீங்கள் அளக்கிற அளவின் படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை (அதாவது பெருங் குற்றத்தை) கவனியாமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் (சிறு குற்றத்தை) பார்க்கிறதென்ன?...........மாயக்காரனே, முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு. பின் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப் போடத் தெளிந்த பார்வையடைவாய்." (மத்தேயு 7 : 1—4)

தீயகருமங்கள் தீய வினைகளையே கொண்டு வரும் என்பதாக வள்ளுவரும்,

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்

பாவத்தின் பலன் துன்பம். ஆகவே பாவத்தை தீயைப் பார்க்கினும் கொடிதென விலக்கல் அவசியம். இதற்கேற்ப, கிறிஸ்துவும், "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப் பழங்களையும் நெரிஞ்சில்களில் அத்திப் பழங்களையும் பறிப்பாருமுண்டோ? அப்படியே நல்லமரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்" (மத்தேயு 7: 16-17) என்றார். கோபத்தின் சாபத்தை எடுத்துக் காட்டும்படி வள்ளுவர்

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்

தன் ஜீவனைக்காத்துக் கொள்ள விரும்புகிறவன் தன் கோபத்தை அடக்கிக் காத்துக் கொள்ளல் தேவை. கிறிஸ்துவும் "கொலை செய்யாதே, கொலை செய்கிறவன் நியாய விசாரணைக்கு ஆளாவான் என்று பூர்வத்தாருக்கு உரைத்ததாகக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்வதோ, தன் சகோதரன் மேல் கோபங் கொள்ளுகிறவன் எவனும் நியாய விசாரணைக்கு ஆளாவான்" (மத்தேயு 5:21,22) என்றார்,

உலகமும் அதன் வாழ்வும் வீண். மெய்ப் பொருள் நாடி வாழ்வதே மனுமக்களின் மேன்மை என்பதாக குறளில்,

நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை

நிலையில்லாதவைகளை நிலையுள்ளவைகள் என்று நினைப்பது அற்ப அறிவும், இழிவுமாம். மேலும்,

எப்பொருள் எத்தன்மை ஆயினும் அப்
மெய்ப்பொருள் காண்ப தறிவு [பொருள்

யாதொரு பொருள் என்ன விதமாய்த் தோன்றினும், அப்பொருளினின்றும் உள்ள உண்மைப் பொருளை அறிவதே மெய்யறிவு. மலைப்பிரசங்கத்திலும் "ஒருவன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய முடியாது. ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனைச் சார்ந்து கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். நீங்கள் கடவுளுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது." (மத்தேயு 6:24). மேலும் குறளில்

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்

அதாவது, பேரின்பத்தை நாடுபவர்கள், சிற்றின்பத்தை விரும்பி அதர்மத்தைச் செய்யார்கள்.

தூய்மையென்பது அவாவின்மை மற்றது
வாய்மை வேண்டா வரும்

முத்தி யென்னப்படுவது ஆசை கவலையில்லாமை. இதர கவலைகளைத் தள்ளி கடவுளையே விரும்பினால் இது வரும். இதற்கிசைய கிறிஸ்துவும் "இதினிமித்தம் எதை உண்போம், எதைக் குடிப்போமென்று உங்கள் உயிருக்காகவும், எதை உடுப்போம் என்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்....முதலாவது, கடவுளுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்" (மத்தேயு 6:25-33) எனப் பகர்ந்தார்.

ஈதலில்லாவிடில் எப்பெருஞ் செல்வமும் வீண். குறளில்,

ஈத லிசைபட வாழ்தல் அது அல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு

எளியவர்களுக்குக் கொடுத்து புகழ் உண்டாக வாழ்தலே மக்களுயிருக்கு ஊதியம். ஆகிலும்,

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ வுலகு

மேகம் உயிர்களுக்கு பிரதியுபகாரமே எதிர்நோக்காமல் மழை பொழிகிறது போல, நாம் செய்யு முபகாரங்களை கைம்மாறு கருதாமல் செய்தலே தர்மமாம். கிறிஸ்துவும் பகர்ந்தனர். "கைம்மாறு கருதாமல் கடன்கொடுங்கள்" (லூக்கா 6:35) என்றும் "மனுஷர் காணவேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் தருமத்தை நிறைவேற்றுதபடி எச்சரிக்கையாயிருங்கள். நிறைவேற்றினால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை........நீயோ தானதர்மம் செய்யும்போது உன் தர்மம் மறைந்திருக்கும்படி உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது. அப்பொழுது மறைந்திருக்கிறதைப் பார்க்கிற உன் பிதாவே உனக்கு பதிலளிப்பார்"

(மத்தேயு 6:4) அன்பும் மாயமற்றதா யிருத்தல் அவசியம். அதுபற்றி வள்ளுவரும்

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

என்றார். வெளித்தோற்றமாக, முக மலர்ந்து சிநேகிப்பது சிநேகமல்ல. ஆனால் அகம் மலர்ந்து உள்ளன்புடன் சிநேகிப்பதே மெய்ச்சிநேகம். இதற்கிசைய நட்புக்கும் ஈதலுக்கும், எத்தகைய நடத்தைக்கும் பொதுப் பிரமாணமாக கிறிஸ்துவும்,

"மனிதர் உங்களுக்கு எதைச் செய்ய விரும்புவார்களோ அவற்றை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத்தேயு 7:12) என்னும் பொற் பிரமாணத்தைக் கற்பித்தார்.

இவ்வாறான அரும் மொழிகளைச் செவியினாற் கேட்பதுவும் கற்பதுவும் போதாது. குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

இத்தகைய நூல்களை சரிவரக் கற்றபின் அக் கல்வியறிவுக்குத் தக்கபடி ஒழுகல் அவசியம். மலைப் பிரசங்கத்தின் இறுதியில் கிறிஸ்துவும்" நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவன் கற்பாறையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாவான்,........நான் சொல்லிய இந்த வார்த்தைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பாவான். (மத்தேயு 7: 24-27) என்றார்.

சுகம் துக்கம் அநித்தியமானவை; ஆனால் நீதி நித்தியமானது. ஆதலால், சுகத்தின் மீதுள்ள ஆசையாலோ, பயத்தாலோ, லோபத்தாலோ, மற்றும், உன்னுடைய உயிருக்கே ஆபத்தேற்படுவதாயிருந்தாலும், அந்த நீதியை விட்டுவிடக் கூடாது

——வியாசர்.

—மு. துரைசாமி

ஜெர்மனியின் பலக்குறைவு

இன்றைய உலகத்தில் தினந்தோறும் நடக்கும் விஷயங்கள், நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியனவாயில்லை. நாளை யென்ன நேருமோ; அடுத்த நிமிஷம் என்ன விஷயங்களை நாம் கேள்விப்படுவோமோ, எவ்வித நிகழ்ச்சிகளை நாம் அனுபவிக்க நேருமோ என்று உலகத்திலுள்ள எல்லா தேசத்துப் பிரஜைகளும் ஏங்கி நிற்கின்றனர். 1939ஆ செப்டம்பர் மாதத்தில் ஐரோப்பா தேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தமும், அதனுடைய போக்கும் வர வர உலகத்தையே நாசகரமான நிலைமைக்கு இழுத்துச் செல்வதை நாம் பார்க்கிறோம். இந்த யுத்தத்தின் முடிவு எப்படியிருக்கும்? யுத்தமுடிவில் மனித சமுதாயம் எப்படி அமையும்? இதை யாரும் நிர்ணயித்துச் சொல்ல முடியாது. ஆனால் பிரிட்டிஷ் தொழில் கட்சித் தலைவர், மேஜர் ஆட்லி கூறுகிறமாதிரி, இன்றைக் கிருப்பது போன்ற ஏற்றத் தாழ்வான சமுதாயமாய் மனித சமூகம் இராது என்று ஒருவாறு ஊகிக்கலாம். இதையும் திட்டமாகக் கூறமுடியுமா? முடியாது. ஏனென்றால், உலக சரித்திரத்தின் சென்றகால நிகழ்ச்சிகள் நிறைந்த, செல்லரித்துப்போன ஏடுகள் நம் முன்னே இதோ கிடக்கின்றன. எந்த ஒரு யுத்தமும, அதனுடைய முடிவு, அடுத்த யுத்தத்துக்கு வித்தாகவே இருக்கிறது. எந்த லட்சியத்திற்காக யுத்தம் ஆரம்பிக்கப்படுகிறதோ, அதைத்தான் எதிர்பார்க்கலாமேதவிர இன்னொரு முடிவை யெப்படி எதிர்பார்க்க முடியும்? ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பே யுத்தத்திற்குக் காரணமாயிருந்தாலுங்கூட, ஏற்றத் தாழ்வில்லாத ஒரு சமூகத்தை அந்த யுத்தம் அமைத்துவிடுவதாயில்லை. அப்படி அமைக்கப்பட்டிருக்குமானால் இருபது வருஷங்களுக்குள் இன்னொரு பெரிய உலக யுத்தத்தின் மத்தியில் உலக ஜனங்கள் ஏங்கிக்கொண்டிருக்கக் காரணமில்லையல்லவா? ஆனால் எதிர்காலத்தில், மனித சமூகம் எப்படி அமைக்கப்படும் என்று முடிவு கட்டுவதற்கோ, அல்லது ஜோசியம் கூறுவதற்கோ நாம் இந்தக் கட்டுரையை யெழுத ஆரம்பிக்கவில்லை.

ருஷ்யாவோடு, பிரிட்டன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதற்காகப் பல மாதங்கள் முயற்சி செய்தது. பின்னே நடைபெற்ற அல்லது நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம் கூர்ந்து கவனித்தோமானால், பிரிட்டனுக்கும் ருஷ்யாவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் இந்த யுத்தப் போக்கே வேறுவிதமாயிருக்குமென்று நாம் நினைக்கவேண்டியதிருக்கிறது. ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்ததாக நாம் கேள்விப்பட்ட சில தினங்களிலேயே ஜெர்மனி, போலந்தின்மீது படையெடுத்தது. அதாவது ஜெர்மனி மற்றொரு உலக யுத்தத்தை ஆரம்பித்தது. இந்த யுத்தம் ஆரம்பித்த ஒன்றரை வருஷம் கழித்து இன்று நாம் என்ன காண்கிறோம்? ருஷ்யாவோடு

பரம விரோதியாயிருந்த ஜப்பான் அதே ருஷ்யாவோடு ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் தன்னுடைய முக்கிய உத்தியோகஸ்தர்களை அனுப்பிக்கொண்டிருக்கிறது. சாதாரண இரண்டு ஒப்பந்தங்கூட ஏற்கனவே இரண்டு நாடுகளுக்கும் முடிந்துவிட்டனவாம். இன்னொரு முக்கியமான ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றனவாம். ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் ஒப்பந்தம் ஏற்பட்ட பின் நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சிகளைக்கொண்டு பார்த்தோமானால், தற்போது நடைபெறும், ருஷ்ய—ஜப்பான் ஒப்பந்தப் பேச்சு, எதிர்கால உலகத்தின் சுபசூசகத்திற்கு அறிகுறியாயில்லை. கொள்கையிலும், ஏற்கனவே யேற்பட்ட காரியங்களாலும், ருஷ்யாவோடு முரண்பாடுடைய தேசங்களான ஜெர்மனியும், ஜப்பானும், ருஷ்யாவின் கூட்டுறவை ஏன் நாடுகின்றன—நாடின? இதை நாம் தெரிந்துகொள்ளவேண்டுமானால் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற, ஈடுபடுவதாயிருக்கிற வல்லரசுகளின் யுத்த சக்தியைத் தெரிந்துகொள்வதோடு சிறப்பாக ருஷ்யாவின் யுத்த சக்தியை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாக்ஸ் வார்னர் என்ற புனைபெயர் போட்டு, ஒரு பெரிய ராணுவநிபுணர், 1939ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வல்லரசுகளின் "சேனாபலம்" (The Military Strength of Powers) என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தைப் போன்று இதுவரை, இவ்வளவு அத்தாட்சி பூர்வமாக வேறொரு புத்தகமும் வெளிவரவில்லை. அவர் அப் புத்தகத்தில், ஒவ்வொரு வல்லரசினுடைய ராணுவ பலத்தைத் தகுந்த முறையில் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் எழுதியிருப்பதிலிருந்து ருஷ்யாவினுடைய செஞ் சேனையின் சக்தி அளவுகடந்திருப்பதாய்த் தெரிகிறது. தகுந்த ஆதாரங்களுடன் எழுதப்பட்டிருப்பதால்' அவர் எழுதியிருப்பது தவறு என்று யாரும் கூறுவதற்கு தைரியம் உண்டாகவில்லை. ஆனால், அவரைத் தெரிந்தவர்கள், அவர், ருஷ்யாவினிடம் அனுதாபம் உள்ளவரென்று சொல்ல மாட்டார்கள். ஏனென்றால், ருஷ்யாவினுடைய அரசியல் கொள்கைகள் சிலவற்றை அவர் அந்தந்த சமயங்களில் மிகவும் கண்டித்தே வந்திருக்கிறார்.

தற்காலம் நடைபெறும் யுத்தத்தில், சகலவிதமான சாதனங்களுடன், ஒரு மூச்சாகப் படையெடுத்து, சிலதினங்களிலேயே ஒரு நாட்டினுடைய வெற்றி, அல்லது தோல்வியைத் தெரியும்படி செய்யப்படுகிறதல்லவா? இந்தப்போர் முறையை ஒரு தீர்க்க தரிசிபோன்று அவர் தன்னுடைய மேற்கண்ட புத்தகத்தில் வர்ணிக்கிறார். அதாவது, ஆரம்பத்திலேயே, எண்ணிக்கையற்ற ஆகாயவிமானங்களையும் டாங்குகளையும் உபயோகித்து, இந்தயுத்த சாதனங்களினால், எதிரியினிடையே ஒரு திகிலையும், தன்னைப்பற்றிய ஒரு பிரபலத்தையும் ஏற்படுத்தி, யுத்தம் ஆரம்பித்த அதே நேரத்தில், எதிரிகளினுடைய பொறுக்கி யெடுக்கப்பட்ட யுத்த கேந்திர ஸ்தானங்களையும் ஆகாய விமான நிலயங்களையும் சூழ்ந்து தாக்கி, டாங்குகளையும் அதற்குப்பின் ராணுவலாரிகளையும் நிறுத்தி, யுத்தக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கிற

குதாம்புகளை ஆகாயத்திலிருந்து குண்டு போட்டுத் தாக்கி, கொஞ்ச நேரத்தில் எதிரிகளைப் பணியவைக்க முடியும் என்று தற்கால யுத்தமுறையைப் பற்றி அவர் எழுதியிருக்கிறார். போலண்ட், நார்வே, ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ் இந்தத்தேசங்களில், மேற்கண்ட யுத்த முறையை அனுஷ்டித்தே, அவ்வளவுபெரியபலம் பொருந்திய தேசங்களை சில, தினங்களிலேயே ஜெர்மனி வெற்றி கொண்டதை நாம் படித்தோம்.

ருஷ்யாவினுடைய செஞ்சேனையானது, மேற்கண்ட யுத்த முறையை அனுஷ்டானபூர்வமாகக் கொண்டு வருவதற்கு வெகு தயாரிப்புச் செய்திருப்பதாய் மாக்ஸ் வார்னர் அபிப்பிராயப்படுகிறார். மற்றும் இந்த யுத்த முறையைப்பற்றிய கற்பனை முதன் முதலாக, அந்த செம்படை அதிகாரிகளினுடைய மூளையில்தான் உதயமானதாம். நிர்ணயமான ஒரு வெற்றிக்காக, தற்கால நவீன யுத்தக் கருவிகளை அவர்கள் வெகுதூரம் ஆராய்ந்திருக்கிறார்களாம். யுத்தம் ஆரம்பமான உடனே, எதிரியினுடைய பாதுகாப்பு ஸ்தலங்களை முதன் முதலில் ஒரே யடியாக அழித்துவிடுவதை, அந்தச் செஞ்சேனையானது தன்னுடைய யுத்தத்தின் முதல் லட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறது. இதற்காக டாங்குகள், ஆகாய விமானங்கள், தற்கால நாகரிக சக்தி நிறைந்த பீரங்கிகள், மற்றும் அபாயகரமான ஆயுதங்கள் இவற்றை அளவு கடந்த முறையில் உபயோகிக்க வேண்டுமென்பது அவர்கள் முறை. இந்த முறையினால் எதிரிகளினுடைய முக்கியமான மர்மஸ்தானங்களை அழித்து அவர்களைத் திகைக்கச் செய்துவிட வேண்டுமாம். ருஷ்யாவினுடைய இந்த யுத்த முறைகளை ஜெர்மனிடானது காப்பியடித்திருக்கிறதை நாம் கேள்விப்படுகிறோம். ஆனால் பாரபட்சமின்றி நோக்குவோமானால், ருஷ்யாவினுடைய ராணுவ சக்திக்கு, ஜெர்மனியினுடைய ராணுவ சக்தி, எவ்வளவோ குறைந்திருப்பது புலனாகும். மற்ற வல்லரசுகள், மேற்கண்ட நவீன யுத்த முறையில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தாமலிருந்தகாலத்திலேயே, ருஷ்யாவானது பல வருஷங்களாக நவீன முறையில் ஆகாய விமானங்களையும் டாங்குகளையும், வேகம் பொருந்திய பீரங்கிகளையும் கணக்கிலடங்காத விதமாகத் தயார் செய்து வந்தது. "வேர்மைச்" என்பது ஜெர்மனியில் யுத்த விஷயமாக எழுதக்கூடிய ஒரு பிரபலமான பத்திரிகை. 1937ம் வருஷத்திலேயே, ருஷ்யாவினிடம், பதினாயிரத்திலிருந்து பதினைழாயிரம்வரை யுத்த ஆகாயவிமானங்கள் இருப்பதாக அப்பத்திரிகை எழுதியது. அதே போன்று ஜெர்மனியின் பிரபலமான "வான் புலோ" என்ற பத்திரிகையானது வருஷம் ஒன்றுக்கு இருபதினாயிரம் யுத்த விமானங்களைச் செய்து குவிக்கக்கூடிய சக்தி ருஷ்யாவுக்கிருப்பதாய் எழுதியிருக்கிறது. இன்றைய நிலைமையில், எவ்வளவு பிரயாசை யெடுத்தாலுங்கூட அமெரிக்காவைத் தவிர வேறு எந்த ஒரு தேசமும் இவ்வளவு சக்தி பொருந்தியதாயிருக்கவில்லை; இருக்கவும் முடியாது. ஜெர்மனியிலுள்ள ஆயுத சாலைகள், எவ்வளவு பிரயாசை யெடுத்தபோதிலுஞ் சரியே, ருஷ்யாவினுடைய பாதி

அளவுக்குத்தான், அதாவது வருஷத்தில் பதினாயிரம் யுத்த விமானங்களையே உற்பத்தி செய்யக்கூடிய சக்தி பொருந்தியனவாயிருக்கின்றன.

அந்த "வான்புலோ" என்ற பத்திரிகை இன்னமும் என்ன எழுதியதென்றால், விமான உற்பத்தியில்மட்டுமில்லை; அவற்றை உபயோகிக்கும் விதத்திலும், இன்று ருஷ்ய விமானங்களை வேறு எந்த ஒரு தேச விமானப் படையும் எதிர்த்து நிற்க முடியாது என்றும் எழுதியிருக்கிறது. யுத்த விமானங்களைச் செலுத்துவதற்குரிய இடங்கள், ட்ரெயினிங் ஸ்கூல்கள், அவற்றில் படித்தவர்களைப் பரீட்சை செய்யும் ஸ்தலங்கள் இவைகள் ருஷ்யாவில் ஒவ்வொரு இடங்களிலும் நிறுவப்பட்டிருப்பது போல் வேறு எந்த ஒரு தேசத்திலும் இல்லை. சென்ற ஸ்பெயின், உள்நாட்டுச் சண்டையில் சோவியத் விமானங்கள், எண்ணிக்கையில் மிகவும் குறைந்தனவாயிருந்தாலுங்கூட, பிராங்கோவுக்குதவியாக அனுப்பப்பட்டிருந்த ஏராளமான இத்தலி, ஜெர்மனி விமானங்களுக்குச் சமதையாக யுத்தம் புரிந்தனவென்று பல பிரஞ்சு தேச யுத்த நிபுணர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

கணக்கிலடங்காதவிதமாய் யுத்த விமானங்களை மாத்திரம் செய்து குவித்துவிட்டால் போதுமா? இதனால் குறிப்பிட்ட வெற்றியை அடைந்துவிட முடியுமா? அப்படியானால், வல்லரசுகள் சரியான சந்தர்ப்பத்தில், தங்களுடைய நாட்டிலே உள்ள தொழிற்சாலைகளில் இதர தொழில்களை நிறுத்திவிட்டு வெறும் ஆகாய விமானங்களைச் செய்து குவித்துவிட முடியுமே? ஆனால் ஆகாய விமான யுத்தத்தில், அதனுடைய எண்ணிக்கையைப் பார்க்கிலும், அதைச் செலுத்துவதிலேதான் ஆகாய விமான யுத்தத்தின் பலன் இருக்கிறது. ஆகாய விமான யுத்தமே அதைச் செலுத்துவதிலுள்ள நிபுணத்துவத்தைப் பொறுத்திருப்பதாய் அனுபவசாலிகளான யுத்த நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விதமாக யுத்த விமானத்தைச் செலுத்துவதற்குரிய நிபுணத்துவம் பூரணமடைவதற்கு மூன்று வருஷப் பழக்கம் வேண்டியதிருக்கிறது. ருஷ்யாவில் 1936ம் வருஷத்திலேயே இந்தமாதிரி நிபுணத்துவம் பெற்ற யுத்த விமானிகள் ஒன்றரை லட்சம் பேர் இருப்பதாகப் பலவித ஆதாரங்களோடு மாக்ஸ் வார்னர் எழுதுகிறார். மற்ற எந்த ஒரு தேசமும் இந்த நிலைமையை எட்டியிருக்கவில்லையென்பது நிச்சயம். தற்காலம் நடைபெறும் யுத்தத்தில் இன்னொரு முக்கியம் என்னவென்றால், பாரசூட்டைப்பற்றியது. இந்த பாரசூட், விமானங்களைப் பார்க்கிலும் முக்கியமானவையென ருஜூப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வல்லரசுகள், இந்தப் பாரசூட் படையினுடைய உபயோகத்தின் தன்மையைத் தெரிந்துகொள்ளாதிருந்த காலத்தில், அதாவது 1935ம் வருஷத்தில், பாரசூட்டின் உபயோகத்தையும் அதனுடைய பலனையும் ருஷ்யா உலகத்திற்கு நிதர்சித்துக் காட்டியது. அப்பொழுதுதான் ஜெர்மானிய யுத்த நிபுணர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள். ஆனால், இன்றைக்குங்கூட, ருஷ்ய பாரசூட் படையோடு, ஜெர்மானிய பார சூட்படையை ஒப்பிட

முடியாது. ருஷ்யாவினுடைய பொறுக்கி யெடுக்கப்பட்ட ஆகாய விமானச் சேனையில், எழுபதினாயிரம் பாராசூட்டர்கள் இருப்பதாகவும், மொத்த விமானப் படையில் ஐந்து லட்சம் பேர் இருப்பதாகவும், ஜெர்மன் யுத்த நிபுணர்களே அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றும், இன்றைய உலகத்தில் பிரபலமாயிருக்கிற எல்லா வல்லரசுகளினுடைய ஆகாயப் படைகள் யாவும் ஒன்று சேர்ந்தாலுங் கூட, ருஷ்யாவுக்குச் சமதையாகச் சொல்ல முடியாதென மேற்கண்ட ஜெர்மன் நிபுணர்களே அபிப்பிராயப்படுகிறார்கள்.

இதுவரை, ருஷ்யாவினுடைய ஆகாயப் படையையும் அதனுடைய தன்மைகளையும்பற்றிப் பேசினோம். இனி டாங்க் சேனையைப்பற்றிப் பார்ப்போம். ஜெர்மன சேனையினுடைய கமாண்டர் இன்சீப் ஜெனரல், "குடேரின்" என்பவர் 1935ம் வருஷத்தில் என்ன எழுதியிருக்கிறாரென்பதைப் பார்ப்போம். "மோட்டார்கள், டாங்குகள் இவற்றைச் செய்வதற்கு, ருஷ்யர்கள் பல தேசங்களிலும் ஆராய்ச்சி செய்து நல்ல விதமான இஞ்சின்களை அந்தத்தேசத்திலும் தெரிந்து அவற்றைத் தங்களுடைய காட்டில் உபயோகிக்கிறார்கள். பத்து ஆயிரம் டாங்குகளையும், ஒன்றரை லட்சம் சாமான் லாரிகளையும், ஒரு லட்சம் பீரங்கி வாகனங்களையும் ருஷ்யர்கள் தயாரித்திருக்கிறார்கள். இயந்திரப் படையில் ஐரோப்பாவில் உள்ள மற்ற எல்லாத் தேசங்களையும்விட ருஷ்யப் படை சிரேஷ்டமாயிருக்கிறது" என்று அவர் 1935ம் வருஷத்திலேயே எழுதியிருக்கிறார். மேற்படி குடேரின் என்பவர் தற்கால இயந்திர யுத்த நிபுணர்கள், பிரபலமானவர்களில் ஒருவர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இன்னமும், ருஷ்யாவினுடைய டாங்குச் சேனையின் அமைப்பையும், அதனுடைய வேகத்தையும் பார்த்த பிறகே, தான், வேகமாக யுத்தத்தை நடத்துவதற்குரிய முறையைத் தெரிந்துகொண்டதாக குடேரின் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளுகிறார். ஏராளமான டாங்குகளைக் கொண்டு எதிரிகளினுடைய கோட்டைகளைத் தகர்த்துச் செல்லக்கூடிய ஒரு யுத்த முறையை ருஷ்யாவே முதன் முதலாக வெளியுலகத்திற்கு நிதர்சித்துக் காட்டியதாக யுத்த நிபுணர்கள் கூறுகிறார்கள். ஜெர்மனியானது, பிரான்ஸ் தேசத்தில் இதே முறையைத்தான் கையாண்டதல்லவா? ருஷ்யாவில் விவசாய நிலங்களில் "ட்ரைக்டர்" (அதாவது சின்ன டாங்குகள் மாதிரி உள்ளவை) மிகவும் ஜாஸ்தியான முறையில் உபயோகிக்கப்படுகின்றன. 1938ம் வருஷத்தில், இப்படியுள்ள நாலரை லட்சம் ட்ரைக்டர் ருஷ்யாவினிடமிருந்தன. இந்த ட்ரைக்டர்களை கொஞ்சப் பேதங்கள் செய்து டாங்குகளாகச் செய்துவிடமுடியும். இதனால் ருஷ்டாவில் டாங்குப்படையும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. ஆனால், டாங்குப் படையில், அதனுடைய எண்ணிக்கையைப் பார்க்கிலும் அவற்றின் தன்மைகளில் விசேஷ கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும். ஸ்பெயின் யுத்தத்தில் ருஷ்யாவினுடைய டாங்குப் படைகள் அபூர்வமான வேலை செய்ததாய், பிரஞ்சு தேசத்தின் மாஜி பிரதம மந்திரி மிஸ்டர் ரேனோ கூறி

யிருப்பதாக மாக்ஸ்வார்னர் சுட்டிக் காட்டுகிறார். ரேனே ருஷ்யக் கொள்கையில் அனுதாபமில்லாதவர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் அடுத்துப் பீரங்கிப் படையின் விசேஷத்தைக் கவனிப்போம்.

1938ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஜெர்மன் சேனையைச் சேர்ந்த யுத்த நிபுணர் ஒருவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார். அதாவது:—ருஷ்யாவினுடைய பீரங்கிப் படை, பிரான்ஸ், பிரிட்டன், இத்தலி, ஜப்பான், போலந்து இந்த தேசங்களினுடைய மொத்த பீரங்கிப் படைகளின் எண்ணிக்கையெவ்வளவோ அதைப் பார்க்கிலும் ஜாஸ்தியானது. இந்தப் பீரங்கிப் படையில், உலகத்திலே ஜெர்மனி இரண்டாவது ஸ்தானத்தை அடைந்திருக்கிறது. ஆனால் ஜெர்மானியப் பீரங்கிப் படையைப் பார்க்கிலும் இரண்டு பங்குள்ளது ருஷ்யாவின் பீரங்கிப் படை என்று அவர் எழுதியிருக்கிறார். எண்ணிக்கையில் மாத்திரம் ருஷ்யப் பீரங்கிப் படை ஜாஸ்தியானதாயிருக்கவில்லை. அதனுடைய வேகமும் மற்ற எல்லா தேசப் பீரங்கிப் படைகளையும் விட ஜாஸ்தியானது என்று மாக்ஸ்வார்னர் எழுதுகிறார். இந்தப் பீரங்கிகளை வேகமாகச் செல்லக் கூடிய மோட்டார்களில் ருஷ்யர்கள் ஏற்றிக் கொள்ளுகிறார்கள். ருஷ்யப் பீரங்கிப் படையில் உள்ளவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஒவ்வொருவரும் பூரண ஞானமுடையவர்களாயிருக்கிறார்கள். இப் பீரங்கிப் படையில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரு கோடியே இருபத்துமூன்று லட்சம் பேர் இருக்கிறார்கள். பீரங்கிப் படையில் ஜெர்மனிக்கு உலகத்தில் இரண்டாவது ஸ்தானம் உண்டு. ஆனால் எண்ணிக்கையில் நாற்பத்து நான்கு லட்சம் பேர்தான். அவர்களிலும் பாதிப்பேர் நிபுணர்களுங்கூட இல்லை.

ருஷ்யாவில், ஒவ்வொரு படையும் சங்கங்களாக அமைந்திருப்பதாயும், பள்ளிக்கூடங்கள்மாதிரி நடத்திவரப் படுவதாகவும் மாக்ஸ்வார்னர் எழுதுகிறார். பெரும்பாலாக ஒவ்வொரு தேசத்திலும் சேனைகள் சம்பளத்திற்கு நியமித்ததாய்த்தானிருக்கும். ஆனால் ருஷ்யாவில் அப்படியில்லை. அங்கு படைகளிருக்கும் ஒவ்வொரு இடத்திலும் ஸ்கூல்கள் கட்டாயம் திறக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர செம்படை லைப்ரரி அங்கங்கு இருக்கின்றன. எண்ணிக்கையில் இவை இரண்டாயிரத்திற்கு அதிகமென்று கூறலாம். தற்கால நவீன யுத்த முறைகள், முற்கால யுத்த முறைகள், இவைகளிலுள்ள பேதங்கள் முதலியவற்றைப்பற்றி பல நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து எழுதிய நூல்கள் அந்த லைப்ரரிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியில், பெரிய யுத்த அதிகாரிகள், இந்த யுத்தக் கலையில் எவ்வளவு நிபுணத்துவம் அடைந்திருக்கிறார்களோ, அதே நிபுணத்துவம் ருஷ்யாவில் ஒவ்வொரு சிப்பாய்களும் பெற்றிருப்பதாய்ப் பிரெஞ்சு ராணுவ நிபுணர் பிடேன் எழுதுகிறார். போலந்திற்கு அனுப்பப்பட்ட ருஷ்ய சேனைகளோடும், இதர யுத்தச் சாமான்களோடும், பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியனவும் அனுப்பப்பட்டனவாம். அந்தப் புத்தகங்களும் பத்திரிகைகளும் யுத்த நிபுணர்களால் எழுதப்பட்டவையென்

—நாராயண சிவன்

இந்தோ பர்மா பிரச்னை

இந்தியாவும் பர்மாவும் வெகு காலமாக இயற்கை அமைப்பினாலும், சரித்திரத்தாலும், கலைகளினாலும், மதத்தினாலும், பொருளாதாரத்தினாலும், அரசியலினாலும் பிணைக்கப்பட்டுள்ளது. சரித்திரமும், கலையும், மதமும் இப்பிணைப்பை பலப்படுத்தியுள்ளன வென்றாலும் உலகத்திலுள்ள இதர தேசங்கள் போன்று பொருளாதாரப் பிரச்னையும் அரசியல் விஷயமும் இரு தேச மக்களையும் வேறு படுத்தி வைக்க அவைகளின் முழு பலத்தையும் காட்டி வருகின்றன. இவைகளாகட்டும் அல்லது, பர்மிய தேச மக்களின் தேசீய உணர்ச்சியாலோ அல்லது பர்மாவில் பற்றுதலுள்ள பிரிட்டிஷாரின் தூண்டுகலாலோ 1937 ஏப்ரல் மாதம் 1ந் தேதி ஏற்பட்ட பர்மா பிரிவினையாகட்டும் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த இந்தோ பர்மா உறவை ஒழிக்க சக்தியற்றவைகளாயின. பர்மா சர்க்காரின் பிரதம மந்திரி பரஸ்பரம் கலந்து பேசி விஷயங்களை முடிவு செய்து கொள்வது சாலச் சிறந்த தென்று சொல்லி யிருப்பது இருவர்களுடைய உறவும் இன்னும் நீடிக்கும் என்று நம்புவதற்கேதுவானதா யிருக்கிறது.

தற்பொழுது இரு தேசங்களுக்கு மிடையே யுள்ள பிரச்னைகளாவன:—

(1) இரு தேசங்களுக்குமிடையேயுள்ள வியாபார ஒப்பந்தம் (2) பர்மாவின் நிலப் பிரச்னை. இதற்கு ஒரு முடிவுகாண பர்மா சர்க்கார். நிலம் வாங்கும் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. (3) பர்மாவில் இந்தியர்கள் குடியேறுதல். இதோடுகூட பர்மாவில் கைத்தொழில் கூலிப் பிரச்னையு மிருந்துவருகிறது. இதுவும் பர்மாவில் குடியேறுவது சம்பந்தமான விசாரணையில் உட்பட்டதாகையால் இதனைத் தனியாகப் பிரிக்க வேண்டிய அவசியமில்லை. வியாபார ஒப்பந்தத்தைப் பற்றி பிரமாதமாய்ப் பேசப்பட்டு வருகிறதென்றால் அரசியலை ஆதாரமாகக் கொண்டுதான் இது இவ்வளவு பிரமாதப் படுத்தப்பட்டு வருகிற தென்பதை மறந்து விடக்கூடாது. இந்தோ சிலோன் வியாபார ஒப்பந்தப் பேச்சு முறிந்து போகக் காரணமா யிருந்த அவ்வளவு கடுமையான பிரச்னைகள இதில் கிடையாது. இருந்தாலும் அவ்விதக் காரணங்களில்லை யென்று எண்ணுவதற்கோ அவைகளை தனியாகக் கவனித்துக் கொள்ளலாமென்று விட்டு விடுவதற்கோ இடமில்லை. இரு தேச நன்மையையும் உத்தேசித்து எல்லாப் பிரச்னைகளையும் ஏகோபித்து ஏககாலத்தில் ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

இந்தோ பர்மா வியாபார ஒப்பந்தத்தை விட்டு இதர விஷயங்களை எடுத்துக் கொள்ளுவோம். பொதுவாக பர்மாவிலும், வெளியிலும் உள்ள

இந்தியர்களிடையே பர்மாவிலுள்ள ஏராளமான இந்திய மக்களின் உரிமை அங்கு போதுமானபடி பாதுகாக்கப்படாது என்ற எண்ணம் உண்டாக ஆரம்பித்து விட்டது. 1930ல் ஏற்பட்ட கோரங்கிக் கலகத்திலும் இந்தியர்களின் உயிருக்கும் சொத்துக்கும் ஏற்பட்ட பெரு நஷ்டம் ஒவ்வொரு இந்தியரின் மனதிலும் இந்திய சர்க்காருக்கும் பீதியை உண்டாக்கியுள்ளது. 1938-ம் வருஷக் கலகத்தில் இந்தியர்களுக்கேற்பட்ட நஷ்டம் குறித்து பிரான்ட்கமிட்டியார் சொல்லியுள்ளது ஒரு துக்ககரமான கதையாகும். அதன் ஷாத்தாவது:—

"பர்மாவிலுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளென்ற முறையில் எதிர் பார்க்கக் கூடிய அளவுக்கு இரங்கூனிலும் நாட்டுப்புறங்களிலுமிருந்து வரும் இந்திய மக்களின் சொத்துக்களுக்கும் உயிருக்கும் பாதுகாப்பளிக்கப் பெறவில்லை யென்பது எங்களது அபிப்பிராயம். எவ்வளவு பலமான போலீஸ் படையிருந்தாலும் திடிரென ஏற்படும் சமூகக் கிளர்ச்சிகளை அவ்வளவு துரிதமாகவும் வெற்றிகரமாகவும் அடக்கி நஷ்டமும், சேதமும் இல்லாமல் செய்துவிட முடியாதென்பதை நாங்களறிவோம். எனினும் நிலைமைகளைக் கவனிக்கும்பொழுது இந்தியர்களுக்குப் போதுமானபாதுகாப்பளிக்கப்பெற வில்லை யென்றிருந்து வந்த அபிப்பிராயத்தை கலகங்கள் ஊர்ஜிதப்படுத்தி விட்டன"

கமிட்டியின் கணக்கின்படி 200 இந்தியர்கள் கொல்லப்பட்டும் 750 பேர் காயமடைந்துமுள்ளார்கள். பர்மிய உத்தியோகஸ்தர்கள் மதிப்பின்படி 19½ லட்ச ரூபாய் சொத்து நஷ்டமும், இந்தியர்கள் மதிப்பில் 56 லட்ச ரூபாய் சொத்து நஷ்டமும் ஏற்பட்டுள்ளன. பிரான்ட் கமிட்டிபடி, பர்மிய உத்தியோகஸ்தர்கள் மதிப்பிடுவதை சரியானதெனக் கொள்ள முடியாதெனவும் இந்தியர்கள் கணக்கெடுக்கப்படும்பொழுது பூராவும் ஆராய்ந்தெடுத்திருப்பதால் உத்தியோகஸ்தர்கள் புள்ளியைவிட இந்தியர்களெடுத்துள்ள புள்ளி மிகப் பொருத்தமானதெனவும் சொல்லியுள்ளார்கள். இந்தியச் சட்டசபையும் இந்திய சர்க்காரும் கஷ்டத்திற்காளான குடும்பத்தாருக்கும் நஷ்டமடைந்த வியாபாரிகளுக்கும் போதுமான நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியத்தைக்குறித்து வற்புறுத்தின. இந்த நஷ்ட ஈடு விஷயமாய் ஒரு சாதகமான முடிவுக்கு வர பர்மா சர்க்கார் நாளதுவரை யோசனைகூடச் செய்யவில்லைபோலும்.

சில்லரை விஷமங்கள்

1937ம் வருட முனிசிபல் திருத்த மசோதா, 1938-ம் வருடத்திய குடியாண்மைச் சட்டம் ஆகிய சில்லரை விஷமங்களும் இந்தியர்களின் மன அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தியிருக்கின்றன. இரங்கூன் முனிசிபாலிட்டியில் பர்மியர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவ மில்லையென்ற குறையை நீக்குவதே முனிசிபல் திருத்த மசோதாவின் நோக்கமெனச் சொல்லப்படுகிறது. இதன்படி இரங்கூன் கார்ப்பரேஷனில் 34 ஸ்தானங்களிருந்து வருவதை 50 ஆக்கி அதில் 25 ஸ்தானங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பர்மியர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இரங்கூனிலிருந்து வரும் இந்திய ஜனத்தொகையையும் அவர்கள் கார்ப்பரேஷனுக்குச் செலுத்தும் தொகையையும் பொறுத்துப் பார்க்கும்பொழுது இந்த மாறுதல் இந்தியப் பிரதிநிதித்துவத்தின் விகிதாசாரத்தைக் குறைப்பதாயிருப்பதால் அவர்கள் இதனை ஒரு பொருத்தமற்ற மாறுதலாய்க் கருதுகிறார்கள்.

1940-ம் வருட பிப்ரவரி மாதவாக்கில் பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தார் இந்திய சர்க்காருக்கு கீழ்க்கண்ட விஷயங்களைச் சமர்ப்பித்துக்கொண்டனர். "குடியானவர்கள் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்கவேண்டிய சேவா சம்பந்தமாய் சுமார் 50000 ஆர்டர்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஐக்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ஆறு, மாதிரிக் கேஸ்களில் பைனான்ஷியல் கமிஷனர் விடுத்துள்ள அறிக்கை, 1938-ம் வருடத்து குடியாண்மைச் சட்டத்தில் சொல்லியுள்ளவைகளுக்கு முரண்பட்டதாயிருப்பதால் அதனை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட இந்த ஆர்டர்கள் சட்ட விரோதமானவை." மேலும் மேற்படி சங்கத்தார் பர்மா சர்க்காரை அணுகி இந்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட ஆர்டர்களை ரத்து செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். பர்மா சர்க்கார் மறுத்துவிட்டனர். இந்திய சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் பலிக்கவில்லை. பின் சங்கத்தினரின் நன்முயற்சியால் 'ஐக்கோர்ட்டில் ஆயிரக்கணக்கான ஷெட்யூரோரெ' கேஸ்கள் தாக்கல் செய்யப்பட்டு மேற்சொன்ன ஆர்டர்களை ரத்து செய்யவேண்டியதாயிற்று.

நிலம் வாங்கும் மசோதா

பர்மா ஜனப்பிரதிநிதி சபையாரால் கடந்த செப்டம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட பர்மா நிலம் வாங்கும் சட்டம் ஆக்ஷேபனைக்குரிய சட்டங்களிலொன்று. 1941 பிப்ரவரி மாதத்தில் பர்மா சர்க்காரின் பிரதம மந்திரி, பம்பரயில் வைத்து விடுத்த அறிக்கையில் இச் சட்டத்தின் நோக்கத்தை விளக்கியுள்ளார். அதில் தகுந்த இடத்தில் சர்க்கார் நிலங்களை வாங்கி ஜாதி மத பேதமன்னியில் விவசாயிகளுக்குக் கொடுத்து அதன் விலையை குறிப்பிட்ட சில வருடங்களில் சொற்ப வட்டியுடன் அந்த விவசாயிகளிடமிருந்து அசலையும் வசூலித்துக் கொள்ளுவதென்று சொல்லியுள்ளார். சட்டத்தின் இந் நோக்கத்தைக் குறித்து ஆக்ஷேபிப்பதற்கில்லை. நோக்கம் சரியானதென்றும் ஸ்தலத்திலில்லாத நிலச்சுவான்தாரை அகற்ற வேண்டிய தவசியமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். சர்க்கார் பலாத்காரமாய் நிலங்களைக் கைப்பற்றுவதுகூட ஆக்ஷேபகரமற்றதெனலாம். ஆனால் இதில் தாவா எங்கிருக்கக்கூடுமென்றால் இந் நோக்கங்களை அடைவதற்கு எடுத்துக்கொள்ளும் மார்க்கங்களில்தான்.

சட்டம் இந்தியர்களுக்கு அநீதமானது

பார்க்குமளவில் சட்டம் விவசாயி அல்லாத நிலச்சுவான்தார்களிடமிருக்கும் நிலங்களை வற்புறுத்தி எடுத்து நிலமில்லாத விவசாயிகளுக்குக்

கொடுக்கக்கூடியதாய்த் தோன்றினலும் இது பர்மாவிலுள்ள இரு இந்திய சமூகத்தாரை பாதிக்கிறது. செட்டியார் நிலச் சொந்தக்காரர்களும் பஞ்சாபிகளும் இதர இந்திய விவசாயிகளும் இதற்கு ஈடு செலுத்துவதற்கு சட்டத்தில்சொல்லியுள்ள முறைகளைக் கவனித்தால் செட்டியார்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியவையாயிருக்கின்றன. கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்தை அதன் உண்மை விலையின் ஓர் பாகத்துக்கு விற்கக் கூடியதாய் அதன் ஷரத்துகள் அமைக்கப்பெற்றுள்ளன. நிலத்தைப் போல் வேறெந்த சொத்தின் விலையையும் வியாபார மந்தம் பாதிக்கவில்லையென்பது யாவருமறிந்த விஷயம். குடியாண்மைச் சட்டத்தால் ஏற்கனவே ஐம்பதிலிருந்து எண்பது சதாம்சம் குறைக்கப்பட்ட வருட வருமானத்தைக் கொண்டு விலை மதிப்பிடப்படுமென்று சொல்லப்பட்டுள்ளது. இதன்படி பார்ப்போமாகில் நிலத்தின் விலை வியாபார மந்த காலத்திலிருந்ததைவிட மிகக் குறைவானதாயிருக்கிறது. இந்த யோசனையின் அநீதத்தைப்பற்றிச் சொல்வதற்கில்லை. குடியாண்மைச் சட்டம் ஏற்படுவதற்கு முன்னிருந்து வந்த வருட வருமானத்தின்பேரில் நிலத்தின் விலையைக் குறைத்து அதன்படி நிலத்தை வாங்குவதற்காகவே குடியாண்மைச் சட்டம் செய்யப்பட்டதென்ற முடிவுக்கு வராமலிருக்க முடியாது. நிலத்தை வாங்குவதற்கு வகுத்துள்ள திட்டம் ஆக்ஷேபனைக்குரியதாயிருக்கிறது. பிரதம மந்திரி ஊசோ அவர்களே இதனை ஒப்புக்கொள்ளுகிறார். சட்டமாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்படி நிலச் சுவான்தார்களுக்கு, அவர்களது நிலங்களுக்கு நியாயமான விலை கிடையாமல் செய்யப்படுமென்று இந்தியாவெங்கும் கவலையிருந்து வருகிறதென்று அவர் சொல்லியுள்ளார். இந்த முறையில் கிடைக்கக்கூடிய சொற்ப விலையை நிர்ணயிக்கக்கூடியவர்களும் பர்மா சர்க்காரின் எக்ஸிக்யூடிவ் உத்தியோகஸ்தர்களே யென்றும் அவர்களது முடிவை எளிதில் மாற்ற முடியாதிருப்பதும் கஷ்டத்தை அதிகரிக்கச் செய்கிறது. கடைசியாக ஜனப்பிரதிநிதி சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் நிலக்கமிஷனரின் முடிவை அப்பலட்ரிபூனலிடம் அப்பீல் செய்யலாமென்று ஏற்கனவே இருந்து வந்ததை மாற்றி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்யலாமென்று செய்யப்பட்டிருந்தாலும் மசோதாவின் அடிப்படையான ஆக்ஷேபனைக்குப் பரிகாரம் தேடப்படவில்லை. எல்லோருடைய ஏகோபித்த சம்மதம் பெற்ற நிலம் எடுக்கும் சட்டம் (Land Acquisition Act) அமுலிலிருக்கும் போது நிலத்தை எடுப்பதற்கான சட்டம் அதிலும் வலுக்கட்டாயமாக எடுக்கும் சந்தர்ப்பத்தில் அதன் ஷரத்துகள் ஏன் சேர்க்கப்பெறவில்லையென்பதற்குக் காரணம் விளங்கவில்லை.

பாகுபாடு காண்பிக்கப் பெறலாம்

பர்மாவில் நிரந்தரமாய் குடியேறியுள்ள இந்தியர்களுக்குப் பாதகமாய் இச் சட்டம் உபயோகப்படுத்தப் பெறலாமென பயப்படக் கூடியதாயிருக்கிறது. இந்திய நிலச் சொந்தக்காரர்களின் நிலங்களின் ஒரு பெரும் பாகத்தை இந்தியர்களே பயிரிட்டு வருகிறார்களென்று சொல்லலாம் இவர்

களில் பலர் ஊர் எதுஎன்றுகூடத் தெரியாதபடி பர்மாவிலேயே நிரந்தர வாசிகளாய் விட்டனர். இந் நிலங்களை வாங்கி இந்திய விவசாயிகளுக்குக் கொடுக்காமல் பர்மிய விவசாயிகளுக்குக் கொடுப்பதைத் தடுப்பதற்கான ஷரத்துகள் சட்டத்திலில்லை. தற்பொழுதிருந்து வரும் ஷரத்துகளுடன் சட்டம் அமுலுக்கு வரும் பட்சத்தில் மேலே சொன்ன பாகுபாடு காட்டப் பெறுமென்று பர்மா சர்க்கார் உறுதி கூற வேண்டும். சட்டத்தில் இதற்கான ஷரத்து சேர்க்கப் பெற ஜனப் பிரதிநிதி சபையில் செய்த முயற்சி பலிக்கவில்லை. ஒரு இந்திய அங்கத்தினர். இவ்விதம் நிலம்வாங்கப்பெறும் போது குடியாண்மைச் சட்டப்படி அந் நிலத்திலிருந்து வர உரிமைபெற்ற நிலத்தில் விவசாயம் செய்து வரும் குடியானவனுக்கு அவன் குறிப்பிடும் பாகத்தில் 30 ஏக்கர் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டு வந்தார். பர்மா சர்க்கார் இத்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவே மறுத்து விட்டது. இது இங்ஙனமிருக்க, கனம் ஊ சா எல்லா வகுப்பினருக்கும் திருப்திகரமாக நிலப் பிரச்னை நிரந்தரமாக தீர்த்து வைக்கப் பெற்றுள்ளது என்று சொல்லியிருப்பதின் அர்த்தம் விளங்கவில்லை. அநீதம் நடப்பதைத் தடுக்க விரும்பினால் பர்மா சர்க்கார் இந்தியர், சிலஷரத்துக்களின் பேரில் சொல்லிய ஆக்ஷேபணைகளின் அந்தரங்கத்தை யுணர்ந்து அதற்கான பரிகாரத்தைச் செய்திருக்கலாம். இன்னும் இதற்குக் காலம் கடந்து விடவில்லை. பர்மா சர்க்கார் சமாதானத்தையும் இந்தியர்களின் ஒத்துழைப்பையும் விரும்பும் பட்சத்தில் சுலபமான வழி இருக்கவே செய்கிறது.

பர்மாவிற்கு இந்தியர்கள் வருகை

பர்மாவில் குடியேறியுள்ளவர்களைக் கணக்கெடுப்பதற்கு தற்போது 1931-ம் வருடத்து ஜனத்தொகைக் கணக்கைவிட வேறு ஆதாரம் கிடையாது. அதன்படி பர்மாவின் ஜனத்தொகையாகிய 14 667,146ல்-1,017,825 இந்தியர்களிருந்து வருகிறார்கள். முக்கியமாக லோயர் பர்மாவிலுள்ள பர்மியர்களிடையே இனிமேல் இந்தியர்கள் பர்மாவுக்கு வருவது சம்பந்தமாகவும் அது பர்மாவின் சமூக சமுதாய, பொருளாதார விஷயங்களைப் பாதிப்பது குறித்தும் ஒரு விதமான அபிப்பிராயம் தோன்றியுள்ளது. இந்த அபிப்பிராயம் இந்தியர்களைப் பற்றி எதிர்ப் பிரசாரம் செய்வோருக்கு ஒரு பெரும் உதவியாயிருந்து வருகிறது.

1874ஆம் வருடத்தில் இந்தியர்கள் பர்மாவுக்குவருந்தி அழைக்கப்பட்டார்களென்பது குறிப்பிடத்தக்கது. அவ்வருஷ முதல் பர்மாவுக்கு இந்தியாவிலிருந்து ஜமீந்தார்களை இழுப்பதற்கு பெரும் நிலப் பரப்புகள் அவர்களுக்குக்கிராண்டாகக் கொடுக்கப்பெற்றன. அதன்பின் அதி சீக்கிரத்தில் விவசாயத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் விவசாயக் கூலிகளும் வரவழைக்கப்பெற்றனர். விவசாயம் அதிகரித்துக்கொண்டே வந்ததினால் 1932 வருடம்வரை கூலிகள் வருவதற்கு இடம் கொடுத்துக்கொண்டே இருந்தது. இந்தியத் தொழிலாளரில்லாவிடில், இந்தியர்கள் விருப்பத்திற்கு மாறாக வியாபார மந்த காலத்தில் அவர்கள் வசமே வந்துசேர்ந்த நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டிராதென்

பதும் பர்மாவின் விவசாயவருமானம் தற்பொழுதிருக்கும் நிலையை அடைந்திராதென்பதும் எல்லோருமறிந்த விஷயம்.

இந்தியத் தொழிலாளிகளின் எண்ணிக்கை, அவர்களின் வியாபகம் அவர்கள் ஈடுபட்டுள்ள பல தொழில்கள் ஆகியவைகளை ஆராய்வதற்காக பர்மா சர்க்கார் மிஸ்டர் பேக்ஸ்டர் தலைமையில் ஒரு கமிட்டியை நிறுவியிருக்கிறது இக் கமிட்டியார் தங்களது வேலைகளை முடித்து பர்மா சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் ரிப்போர்ட்டு சமர்ப்பித்திருப்பதாய் அறிகிறோம். கமிட்டியின் முடிவு எவ்விதமிருப்பினும் இந்தியர்கள் பர்மாவுக்கு வந்துபோவதைபர்மாசர்க்கார்நிரந்தரமாய் தடைசெய்யாதிருப்பதற்கு ஏற்பாடு செய்வது இந்திய சர்க்காரின் கடமையாகும். பர்மாவில் தரிசு நிலங்கள் ஏராளமாயிருப்பதுடன் வெட்டித் திருத்தி வேளாண்மைக்குக் கொண்டு வரக்கூடிய நிலங்களும் அதிகமாயிருக்கின்றன. இவைகளையெல்லாம் உபயோகப்படுத்தி பர்மாவின் விவசாய வருமானத்தை அதிகப்படுத்த இந்தியர்களுக்குச் சந்தர்ப்பமளித்தால் இரு தேசமும் நன்மை பெற ஏதுவாயிருக்கும்.

இந்தியாவுக்கு பர்மாவின் கடப்பாடு

பர்மாவின் பொருளாதார அபிவிருத்திக்குக் காரணம் பெரும்பாலும் இந்தியர்களேயாகும். விவசாயத் தொழிலாளிகளுடன் இந்திய முதலாளிகளும், ஆலைத் தொழிலாளிகளும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அதிகமான உதவி புரிந்துள்ளனர். இந்திய மூலதனத்தால் ஏற்படுத்தப்பெற்ற வெளிநாட்டு வியாபாரத்தின் பெரும் பாகமும் இந்தியர்கள் வசமே இருந்து வருகிறது. உள்நாட்டு வியாபாரங்களுக்கும் சில்லரைத் தொழில்களுக்கும் இந்தியர்களின் துணிவும் மூலதனமுமே காரணம். நாட்டின் விவசாயம், வியாபாரம் கைத்தொழில் ஆகியவைகளின் அபிவிருத்திக்கு செட்டியார்கள் செய்துள்ள சேவையை எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இன்று இரங்கூன் நகரில் பர்மியர்களைவிட இந்தியர்களே அதிகமாயிருந்து வருகின்றனர். கார்ப்பரேஷனின் 60 லட்ச ரூபாய் வருமானத்தில் இந்தியர்கள் 55·49 சதாம்சமும் ஐரோப்பியர்கள் 15·34 சதாம்சமும் பர்மியர்கள் 11·27 சதாம்சமும் இதரர்கள் 17·89 சதாம்சமும் கொடுத்து வருகிறார்கள். எல்லாப் பெரிய மார்க்கெட்டுகளும் இந்தியர்களுக்குச் சொந்தமானவை. அங்கு 4,00,000 பேருள்ளதில் இந்தியர்கள் 2,13,000, பர்மியர்கள் 1,22,000, சீனர்கள் 31,000 இதர எஞ்சியவர்கள் சிறு சிறு சமூகத்தினர்கள். இந் நிலைமை இரங்கூனில் மட்டிலுமல்ல. இந்தியர்கள் பல ஜில்லாக்களிலுள்ள பல நகர்களுக்கும் சென்று அவர்களது ஊக்கமிக்க உழைப்பினால் பெரும் கைத்தொழில்களையும வியாபாரங்களையும் ஆங்காங்கு ஸ்தாபித்துள்ளனர். பர்மா மாகாண வங்கி விசாரணைக் கமிட்டியின் அறிக்கைப்படி பர்மாவில் செட்டியார்கள் 75 கோடி ரூபாய் மூலதனம் முடக்கியுள்ளனர். ஆகவே இந்தியர்களுக்குப் பர்மாவில் பலவிதமான பற்றுதலிருந்து வருகிறதென்

பதும் பின்னால் இரு தேசங்களுமாய் ஏற்படுத்திக்கொள்ளும் பொருளாதாரத் திட்டங்களில் இந்தியர்களின் நலன் பாதிக்கப்படாத ஷரத்துக்கள் சேர்க்கப்பெற வேண்டியதவசியமெனவும் சொல்ல வேண்டியதில்லை.

இந்தோ பர்மா வியாபாரம்

அனுவசியமாகஇரு தேசவியாபாரத்தையும் தடைசெய்து கொள்ளாதிருப்பதற்காகவும், பர்மாவின் பொருளாதாரத்தை போதியபடி பாதுகாப்பதற்காகவும் இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தின் 60வது ஸெக்ஷனில் ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமாய் மன்னர் பிரான் ஆர்டர் பிறப்பிக்க வேணுமென்ற ஷரத்தை பார்லிமெண்டார் சேர்த்தனர். 1937 மார்ச்சு மாதம் 18௳யில் மன்னர் பிரானின் ஆர்டர் பிறப்பிக்கப் பட்டது. இந்த ஆர்டர் பிரிவினைத் தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்கோ அல்லது வைசிராயால் பர்மா கவர்னருக்கோ அல்லது பர்மா கவர்னரால் வைசிராய்க்கோ 12 மாத நோட்டீஸ் காலத்திற்கோ இவ்விரண்டிலும் எது அதிகமாயிருக்கிறதோ அக்கால அளவுக்கு அமுலிலிருக்கும். இதன்படி 1937 ஏப்ரல் முதல் மூன்று வருடங்களுக்கு வியாபார சம்பந்தமாய் யாதொரு மாறுதலும் ஏற்படுத்தப் பெறவில்லை. 1939 பிப்ரவரி மாதம் 10௳ வியாபார ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேணுமாய் நோட்டீஸ் கொடுக்க வைசிராயைக் கேட்டுக்கொள்வதென இந்திய சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இந்திய சர்க்கார் இத்துறையில் யாதொருநடவடிக்கையுமெடுத்துக் கொள்ளவில்லையெனினும் பர்மா சர்க்கார் தாமாகவே 1940 மார்ச்சு 31௳ இந்திய சர்க்காருக்கு வியாபார ஒப்பந்தத்தை ரத்துச் செய்து கொள்ள நோட்டீஸ் கொடுத்தனர். இருந்து வந்த ஒப்பந்தம் பர்மாவுக்குச் சாதகமாயும் இந்தியாவுக்குப் பாதகமாயுமிருக்க பர்மா சர்க்கார் இவ்விதம் செய்தது ஆச்சர்யகரமானதாகும். ஏற்கனவே இருந்த ஒப்பந்தப்படி இந்திய சர்க்கார் பர்மா துறைமுகங்களை இந்தியத்துறைமுகங்களைப் போல் பாவிக்க வேண்டும். மேலும் பர்மாவிலிருந்து இறக்குமதியாகும் சாமான்களுக்கு சுங்க வரி விதிக்கக் கூடாது. இது மட்டுமல்ல; பர்மாவைத் தவிர இதர தேசங்களிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாகும் சரக்குகளுக்கு பிரிவினைக்கு முன்னால் விதித்து வந்த சுங்க வரி விகிதத்தை பர்மா சர்க்காரின் சம்மதமன்னியில் குறைக்கவோ ரத்துச் செய்யவோ கூடாது.

1939ல் இந்தியா சட்ட சபைத் தீர்மானத்தில் வியாபார ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டுமென்பதோடல்லாமல் பர்மா சர்க்காருடன் புதிதாய் செய்து கொள்ள வேண்டிய ஒப்பந்தம் குறித்து பல கட்சியினரையும் கலந்து அவ்விதம் வரும் முடிவை சட்ட சபையில் நிறைவேற்ற வேணுமென்று சொல்லப் பட்டுள்ளது. பர்மா தூது கோஷ்டியினருடன் கலந்தாலோசிப்பதற்கு இந்திய சர்க்கார், பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துள்ள முறை இத்தீர்மானத்திற்கிணங்க உள்ளதாகச் சொல்லவியலாது.

பர்மா சர்க்கார் இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்து கொள்ள ஆத்திரப்

படுவதின் நோக்கம், இறக்குமதி சாமான்களுக்கு யதேச்சாதிகாரமாக, தங்கு தடையன்னியில் வரி விதிப்ப தற்கே யாகும். இந்தியாவி லிருந்து இறக்குமதி யாகும் சாமான்களுக்கு வரி விதிப்பதினுல் அவர்களது வரு மானத்தை அதிகரிக்கச் செய்யலா மென்று பர்மா சர்க்கார் கருதுகிறது போலும்.

பர்மாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி

இரு தேச ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமாய் ஏற்கனவே இருந்து வந்த ஏற்பாட்டைக் கவனித்தால் பர் மாவே லாபம் பெறக்கூடியதாயுள்ள தென்பதைக் காணலாம். இந்தியாவி லிருந்து பர்மாவுக்குக் கீழ்க் கண்ட சாமான்கள் அதிகமாய் ஏற்றுமதி யாகின்றன. பலவிதமான துணிச் சரக்குகள், நூல், தயார் செய்யப் பட்ட சணல் (சாக்கு) இரும்பு, உருக்கு (உருட்டுக் கம்பி, தகடு முதலியன) நிலக்கரி, கோதுமைமா, எண்ணெ, தயார் செய்ததும் செய்யாததுமான புகையிலை, மீன் (உப்பிட்டதும், உலர்த் தியதும்) வெங்காயம்.

பர்மாவுக் கவசியமான துணிச் சரக் கில் பெரும் பகுதியையும் இந்தியாவே கொடுத்து வருகிறது. 1938-39ல் பர்மாவிற்கு 13,70,00,000 கஜம் துணி இறக்குமதியானதில் இந்தியாவி லிருந்து 8,90,00,000 கஜம் துணி வந்திருக்கிறது. 1939-40ல் (11 மாதங் களில்) 11 கோடி 66 லட்சத்தில் 11 கோடி கஜமும் இந்தியாவிலிருந்தே இறக்குமதியாகி யுள்ளது. இந்தியா வின் துணிச் சரக்கு ஏற்றுமதியில் சரிபாதி பர்மாவிற்கே யாகும். இந்தி யத் துணிச் சரக்குச்கு பர்மா ஓர் முக்கிய மார்க்கெட்டு. பர்மா ஏதே னும் வரி விதிக்கும் பக்ஷத்தில் இரு தேச துணி வியாபாரத்தையும் பாதிக் கும். இந்தியாவின் நூல் ஏற்றுமதி யின் மூன்றி லொரு பாகம் பர்மா வுக்கேயாகும். இது பர்மாவின் மொத்த இறக்குமதியில் 82 சதாம்சத் தைக் கொண்டது.

சணல் சம்பந்தப்பட்ட வரையில் பர்மாவின் தேவை பூராவையும் இந்தி யாவே திருப்தி செய்விக்கிறது. இந்தி யாவின் இச்சரக்கு ஏற்றுமதியின் பத்தி லொரு பாகம் பர்மாவுக்கே யாகும். பர்மாவின் கணக்குப்படி பர்மாவின் இரும்பு இறக்குமதியில் பாதி இந்தியாவிலிருந்தென்றும் மொத்த இறக்கு மதியில் 100க்கு 37 பாகம் பிரிட்டனிலிருந் தென்றும் சொல்லப் பட்டுள்ளது. இந்தியா வுக்கு இரும்பு ஏற்றுமதி செய்யக் கூடிய தேசம் அடுத்தொன்று மில்லாத தால் ரெகுலேஷன் ஆர்டர் இருந்து வருவது பர்மாவுடன் இத்தொழில் செய்து வருவதற்குச் சாதகமாயிருந்து வருகிறது. மேலே சொல்லியுள்ள வை களில் இதர சாமான்களை பர்மாவுக்கு ஏற்றுமதி செய்வதில் இந்தியாவே ஏகபோக உரிமையை அனுபவித்து வருகிற தென்று சொல்லலாம். ஆனல் டின்களிலடைத்த மீன் வியபாரத்தி லும் உலர்ந்த மீன் வியாபாரத்திலும் மலேயாதேசமும் ஜப்பானும் இந்தியா வுடன் போட்டியிடுகின்றன. பர்மா வின் சர்க்கரை இறக்குமதி சற்றே மாறுபட்டதாகும். பர்மாவில் வருடம் ஒன்றுக்கு 40000 டன் ஜீனி செல வாகிற தென கணக்கிடப் பட்டுள்ளது சமீபத்தி லெடுத்துள்ள கணக்குப்படி

பர்மாவின் உற்பத்தி 28000 டன்களாகும். பர்மாவின் இச்சரக்கின் இறக்குமதியின் ஓர் பகுதியையே இந்தியா எடுத்துக் கொண்டுள்ளது. பர்மாவுக்குத் தேவையான சர்க்கரையை அனுப்பி வர இதர தேசங்களைக் காட்டிலும் இந்தியாவுக்கே அதிக உரிமை இருந்து வர வேணுமென்று இந்திய வியாபாரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

இந்தியாவுக்கு பர்மாவின் ஏற்றுமதி

பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதியாவது அரிசி, நெல், மண்ணெண்ணை, பெட்ரோல், தேக்கு முதலிய மரங்கள் ஆகியவைகளாகும். இந்தியாவின் அரிசி இறக்குமதியைக் கவனிப்போமாகில் இது பூராவும் பர்மா வசமிருந்து வருகிறதென்பதும் இதர எந்த தேசமும் இதனுடன் போட்டியிட சக்தியற்றதாயிருக்கிறதென்பதும் தெரியவரும். இந்தியாவின் விளைவில் ஐந்து அல்லது ஆறு சதாம்சமே பர்மாவிலிருந்து இறக்குமதி யாகிறதென்றாலும் அது பர்மாவின் மொத்த ஏற்றுமதியின் பாதியாகுமென்றும் வருடந்தோறும் இந்தச் சரக்குக்காகமட்டிலும் 12 கோடி ரூபாய்க்குமேல் இந்தியா பர்மாவுக்குக் கொடுத்து வருகிறதென்றும் சொல்லலாம். 1938-39ல் 17 கோடி ரூபாய் மதிப்புள்ள 1,76,7000 டன் அரிசி பர்மாவிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பர்மாவின் மண்ணெண்ணை ஏற்றுமதி பூராவும் இந்தியாவுக்கேயாகும். பெட்ரோலும் அப்படியே. இது போன்றே இதரசுரங்க எண்ணைகளும். பர்மாவின் ஏற்றுமதியில் 100க்கு 60 பங்கு இந்தியா விற்கேயாகும்.

இந்தியாவைவிட பர்மாவே சாதகமடைகிறது

இரு தேசங்களும் விதித்து வரும் வரி விகிதங்களைப்பற்றிச் சிறிது விவரிப்போம். துணி ஏற்றுமதியில் யுனைடெட் கிங்டம், ஜப்பான் இவைகளை விட இந்தியா சில சலுகைகளைப் பெற்றுள்ளது. இரும்பு உருக்கிலும் இது போன்றே. இவ்விரு கைத்தொழில்களும் இதர தேச போட்டியிலிருந்து இந்தியாவில் பாதுகாப்பளிக்கப்பட்டிருப்பதுபோல் பர்மாவிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது. சணல் தொழில் இந்தியாவின் ஏகபோக உரிமையாயிருப்பதால் அவ்வியாபாரத்தினால் ஒரு தனி நன்மையை இந்தியா பெறமுடியாது. சாக்கு வரியன்றியில் பர்மாவில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப் பெறுவதால் பர்மாவின் மில் தொழிலுக்கும் கோணி உபயோகப்படுத்தும் இதர தொழில்களுக்கும் பெரும் உதவியாயிருந்து வருகிறது. பர்மா தயார் செய்யப்பட்டதும் தயார் செய்யப்படாததுமான புகையிலையின்பேரில் போட்டுவரும் இறக்குமதியானது இந்தியாவுக்குச் சற்று சாதகமான முறையிலுள்ளது. இச் சலுகை யில்லாதவரையில் இந்தியா தனது தயார் செய்யப்பட்டதும், தயார் செய்யப்படாததுமான புகையிலை வியாபாரத்தை பர்மாவில் நிலைநிறுத்திக்கொள்ள முடியாது. கல்க்கரி இறக்குமதியில் அவ்வளவு சலுகை யில்லாதுபோயினும் தென்னாப்பிரிக்காவிலிருந்து வருவதற்குப் போடும் வரியைவிட சற்றுக் குறைவானதே. மீன், காய்கறிகள், நவதானியங்கள், எண்ணை வித்துக்கள் முதலியவை சம்பந்தப்பட்டவரையில் இரு தேசங்

களுக்கு மிடையேயுள்ள வியாபாரத் தடையற்ற தன்மையில் இந்தியா சாதகமடைந்துள்ளதென்று சொல்லி விட முடியாது. இந்தியா ஏற்றுமதி செய்யும் மேலே சொன்ன பொருள் களின் வியாபாரத்தின் மதிப்பு அவ் வளவு உயர்ந்ததென்றோ அல்லது அவ்வளவு முக்கியமானதென்றோ இந்தியாவைப் பொறுத்தமட்டில் சொல்லமுடியாது. பர்மாவின் இறக்கு மதியில் பாதி இந்தியா அத்தேசத்திற் குச் செய்யும் ஏற்றுமதியேயாயினும் அது இந்தியாவின் மொத்த ஏற்று மதியில் நூற்றில் ஏழு பங்கேயாத லால் இது இந்தியாவுக்கு ஓர் பிரமாத மான விஷயமாகச் சொல்லுவதற் கில்லை.

இந்தியாவில். பர்மாவின் இறக்கு மதி மிக முக்கியமானது. பர்மாவின் மொத்த ஏற்றுமதியில 100க்கு 55 பங்கு இந்தியாவுக்காகும். இதில் 100க்கு 80 பங்கு அரிசியும் மரமும். இந்திய மார்க்கெட்டில் இப் பொருள் களின் நிலை அவ்வளவு முக்கியமான தாகக் கருதப்படவில்லை. அவைகள் இந்தியாவுக்கு வந்துதானாகவேண்டு மென்ற நிலையில் இந்தியா இல்லை. நாம் மேலே சொல்லியபடி பர்மாவி லிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி பர்மாவின் மொத்த ஏற்றுமதி யில் பாதியாயிருப்பினும் அது இந்தி யாவின் விளைவில் ஐந்து அல்லது ஆறு சதாம்சம்தான். பர்மாவுக்கு இந்தியா வுக்குப் பதிலாக ஒரு மார்க்கெட் தேடுவது அவ்வளவு எளிதானதல்ல. இந்தியாவில் ஏராளமாய் அரிசி உற்பத்தி செய்வதற்குச் செய்துவரும் கிளர்ச்சிகளுக்கும் பிரசாரங்களுக்கும் ஊக்கம் கிடைக்கும்பட்சத்தில் இப் பொருளைப் பொறுத்தவரை தேசத் தின் தேவைக்கு பிறரை எதிர்பார்த்து நிற்கவேண்டிய அவசியம் இல்லாத தாய்விடும். மற்றப்படி பர்மாவி லிருந்து இறக்குமதியாகும் மண் ணெண்ணெ பெட்ரோல் இன்னும் பல சுரங்க எண்ணெகளைப் பொறுத்த வரையில் இவைகள் யுத்த காலங்களி லல்லாது இதர காலங்களில் அவ் வளவு அத்தியாவசியமானவைகளாக கருதப்படுவதற்கில்லை,

பிரிட்டிஷ் முதலாளித்துவம் பர்மா எண்ணெக்கு ரஷ்யா, ருமேனியா எண்ணெகளைவிடஇயாலன்1க்கு இட்டத் தட்ட ஒரணு சலுகை காட்டி வருவ தால் தான் எண்ணெ வியாபாரத்தில் உலகப் போட்டி யிருந்தும் இந்திய மார்க்கட்டை பர்மா இழுக்காம லிருக் கிறது. இச்சலுகை பிரிட்டிஷ் எண்ணெ முதலாளிகளுக்கு லாபகரமா யிருப்ப தோடு இந்திய ஜனங்கள் கொடுக்கும் ஒரு மானியமுமாகும். ஸயாம் தேசத் துக்கு தடையில்லாமல் போட்டியிட அனுமதி யளிக்கும் பட்சத்தில் பர்மா அதன் மர வியாபாரத்தை இந்தியா வில் தொடர்ந்து செய்வது கஷ்ட மென்பதை உணரும்.

இந்தியா பர்மா எற்றுமதி இறக்கு மதி வியாபாரத்தில் பர்மாவே சாதக மடைந்துள்ளது. 1937-38, 1938-39, 1939-40 இவ்வருடங்களில் இந்தோ பர்மாவியாபாரத்தில் பர்மா, முறையே 16, 14, 19 கோடி ரூபாய்கள் சாதக மடைந்துள்ளது. சென்ற ஐந்து வருட வியாபாரத்தில் சராசரி 100க்கு 62 பங்கு வியாபார சாதகத்தை பர்மா அடைந்துள்ளதென்று பர்மியக் கணக்குகளே ஒப்புக் கொள்ளு

கின்றன. இந்தியாவுக்குப் பர்மாவின் இறக்குமதி உதவியா யிருக்குமென்றாலும் அது தவிர்க்கமுடியாத அவ்வளவு அவசியமானதாகச் சொல்லுவதற்கில்லை. ஆனால் பர்மாவுக்கு இந்திய மார்க்கெட்டு அத்தியாவசிய மென்று சந்தேகமற சொல்லலாம், பர்மா மார்க்கெட்டில் இந்தியாவின் ஏற்றுமதிச் சரக்குகளுக்கு சலுகைகளும் சாதகங்களும் இருந்து வருகின்றதென்பது உண்மை. ஆனால் வியாபாரப் போட்டி ஏதேனும் ஏற்படும் பட்சத்தில் இந்தியாவை விட பர்மாவையே அது மிகவும் பாதிக்குமென்பதற்குச் சந்தேகமே கிடையாது. இந்தியா பர்மா அரிசிக்குத் தடையோ வரியோ விதிக்கும் பட்சத்தில் பர்மாவின் பொருளாதாரமோ, அல்லது அதன் விவசாயப் பொருளாதாரம் பூராவுமோ பாதிக்கப் பெறலாம்.

1938 மார்ச்சு மாதத்தில் ஸர் ஹ்யூ ஸ்டீபன்ஸன் ஒரு கூட்டத்தில் கீழ்கண்டவாறு பேசியுள்ளார்.

"இந்தியச் சரக்குடன் போட்டியிடும் இதர தேசச் சரக்குகளுக்கு வரியைக் குறைத்து இந்தியச் சரக்குகளுக்கு பர்மா மார்க்கட்டிலிருந்து வரும் சலுகையை இல்லாமற் செய்வதற்கு பர்மாவுக்கு இடம் கொடுக்கும்பட்சத்தில் பர்மாவுடன் தடையற்ற வியாபாரம் செய்வதில் இந்தியாவுக்கு லாபமில்லை. இந்திய சர்க்கார் விரும்பும் ஒரே விஷயம் யாதெனில் இந்தியச் சரக்குகளுக்கு பர்மாவிலும் பர்மா சரக்குகளுக்கு இந்தியாவிலும் இருந்துவரும் சலுகைகள் தொடர்ந்து இருந்து வருவதே. இந்தியா நிபந்தனையற்ற வியாபாரத்தினாலேற்படக்கூடும் நன்மையளவுக்கு பர்மாவுக்கு நன்மை செய்ய பிரிட்டன் முன்வராது. பிரிட்டன் பர்மாவின் அரிசி, எண்ணை, மரம் முதலிய யாவற்றையும் வாங்கிக் கொள்வது சாத்தியமில்லை. பர்மா அதற்கு லாபகரமான விதத்தில் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமையை விரும்புமெனினும் இந்திய மார்க்கெட்டு அதற்கு மிக மிக அவசியமானது. அதனை நிலைநிறுத்திக் கொள்ளுவதற்கு தற்பொழுதிருந்து வரும் வியாபார நிபந்தனைகளைத் தொடர்ந்து கொண்டு போவதைத் தவிர வேறு சிறந்த முறை கிடையாது."

பர்மாவின் செய்கை சரியானதல்ல

யுத்தச் செலவுக்கான வருமானத்தைத் தேடுவதற்காக இந்திய இறக்குமதியின் பேரில் வரி விதிக்க பர்மா கவர்ன்மெண்டு உரிமை கொண்டாடுவதை அழுத்தமாகக் கண்டித்து அவர்களை எச்சரிக்க வேண்டும். வருமானத்தை உயர்த்தி யுத்தத்திற்கு உதவியளிக்க வேண்டுமென்பது சிலாக்கியமான விஷயம். ஆனால் தற்காலிகமான நிலைமையை சமாளிப்பதற்கு வியாபாரத்திற்காக செய்யப்படும் ஏற்பாட்டின் மூலம் வருமானத்தைப் பெருக்க முயற்சிப்பது தேச நன்மைக்குகந்ததாகா தென்பதோடு தேசத்தின் பொருளாதாரமும் அவ்வளவுபலமானதாகாது. இந்தியாவிலும் வருமானத்தைப் பெருக்க முயற்சிகள் நடந்து வருகின்றன. பிரிட்டனும் அமெரிக்காவும் இதனைச் செய்து வருகின்றன. ஆனால் இவர்கள் யாரும் வியாபார

ஒப்பந்தத்தை இதற்கு உபயோகப் படுத்த நினைக்கவில்லை. பர்மா இம் முறையில் வருமானத்தைப் பெருக்க விரும்பும் பட்சத்தில் இறக்குமதி செய்து சேமித்து வைக்கும் சாமான்களின் மீது அதிகமான சுங்க வரி விதித்து இந்தியாவுக்குக் காட்டி வரும் சலுகையை தொடர்ந்து காட்டி வரலாகாதா? அவ்விதமாயின் இப்பொழுதிருந்து வரும் டிரேட் ரெகுலேஷனை சற்றே மாற்றி யமைத்துக் கொண்டு ஒரு விரிவான வியாபார ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல் செய்து கொள்ளலா இம்முறையில் இந்தோ பர்மா வி[illegible]பாரம் வழக்கம் போல் சாதா[illegible]மாய் நடந்து வருவதோடு இந்தி[illegible]ளு தம் பர்மியர்கள் பாரபக்ஷம் காட்டி வருகிறார்களென்ற சந்தேகம் ஏற்படாமலுமிருக்கும்.

எது எவ்விதமிருப்பினும் நாம் ஏற்கனவே சொன்னபடி இரு தேசங்களுக்குமிடையே ஏற்படவிருக்கும் வியாபார ஒப்பந்தத்தில் பர்மாவிலுள்ள இந்தியர்களுக்கு அத்தேசத்திலிருந்து வரும் அரசியல் பொருளாதார உரிமைகள் பாதிக்கப்பெறாதென்று பர்மா சர்க்கார் தெளிவுறச் சொல்லியிருக்கவேண்டும். அதோடு கூட அவர்களுக்கு புதிய நிபந்தனைகள் ஏற்படுத்தக்கூடிய அல்லது அவர்களை பாகுபடுத்தக்கூடிய ஷரத்துகள் அதில் சேர்க்கப் பட்டிருக்கக்கூடாது.

சந்தா நேயர்களுக்கு!

ஏப்ரல் மாதத்திய நமது "ஜோதி" இரங்கூனில் கடந்த மாதக் கடைசி வாரத்தில் நடந்த விளக்கணைப்பு காரணமாக சுமார் இரண்டு வாரம் இதழ் வெளிவரச் சுணக்கம் ஏற்பட்டுவிட்டதற்கு நேயர்களை மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

மானேஜர்.

—ரா. கி. இங்கர்ஸால்

மானிட ஜாதி திருந்துவதெப்படி?

“அஞ்ஞானத்தைத் தவிர்த்து வேறோர் அந்தகாரமில்லை,” நிலைமைகளுக் கேற்றவாறு மனிதன் தோன்றுகிறான். அப்படித் தோன்றுகிற ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஏதோ சில குறைகள் இருக்கவே செய்கின்றன. அதற்கு அவனைப் பொறுப்பாளியாக்குவது சரியாகாது. இயற்கையானது தனிப்பட்ட மனிதனையோ, ஜீவராசிகளின் கூட்டத்தையோ லட்சியம் செய்வதில்லை.

ஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் பின் தொடர கடைசியில் எல்லா ஜீவராசிகளும் மரணத்தினால் பின் தொடரப் படுகின்றன. கடைசியாக ஒவ்வொரு ஜீவ வடிவமும், ஒவ்வொரு சுய உணர்ச்சியும், ஒவ்வோர் எண்ணமும், ஒவ்வொரு செயலும் நிலைமைகளை யொட்டியும் எண்ணிறந்த பழைய கால சம்பவங்கள், நிகழ்கால உண்மைகள் ஆகிய இவைகளை யொட்டியும் அமைகின்றன. நிகழ்காலம் என்பது, இறந்த காலத்தின் குழந்தை; எதிர்காலத்தின் தாய்.

பிரதி மனிதனும் தான் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்று ஆசைப் படுகிறான். தன் தேக போஷணைக்கு வேண்டிய ஆகாரம், இருக்க இடம், உடுக்க உடை இவைகளை அடைய விரும்புகிறான். தனக்கு மனப்பசி யெடுக்கிறபோது அதனை தன் திறமைக் கேற்றவாறு அன்பு, அறிவு, ஞானம், கலை, கீதம் இவைகளைக் கொண்டு போஷிக்க ஆவல் கொள்கிறான்.

காட்டு மிராண்டுகளின் தேவை மிகச் சொற்பமே, ஆனாலும் நாகரிகம் வளர வளர மனிதனுடைய தேக சம்பந்தமான தேவைகள் அதிகப் படுகின்றன; அவனுடைய ஞானாகாசம் விசாலமடைகிறது; அவனுடைய மூளையோ ‘இன்னும் எனக்குத் தேவை; இன்னும் எனக்குத் தேவை’ என்று கேட்கிறது.

காட்டு மிராண்டியாகிய மனிதனுக்கு உணர்ச்சிதானுண்டு; சிந்திக்கிற சக்தி கிடையாது. அவனுடைய கோப தாபங்கள் அவனுடைய சிந்தனையிலிருந்து எழுந்தவை யல்ல. அப்படியே ஒரு ஞானியினுடைய சிந்தனா சக்தி அவனுடைய கோப தாபங்களின் விளைவல்ல. குழந்தைகளுக்கு வஸ்து விவேகம் ஏற்படுவதற்கு முன்னரே அவைகளுக்கு தேவைகளும் உண்டு; கோப தாபங்களும் உண்டு. அது போலவே ஒரு ஜாதி குழந்தைப் பருவமா யிருக்கையில் அந்த ஜாதியினுடைய தேவைகளும், கோப தாபங்களுந்தான் முன்னணியில் வந்து நிற்கின்றன.

காட்டுமிராண்டியான மனிதன் வெளித் தோற்றங்களுக்கும், இந்தத் தோற்றங்களினால் ஏற்படுகிற மனோ விகாரங்களுக்கும் கட்டுப்பட்டவ

னுகிக் கிடந்தான். அவனுடைய மனமானது பலஹீனமடைந்துகிடந்தது. அவன் மந்த புத்தியுள்ளவனுயிருந்தான். எதையும் எதிர்த்துப்போராடும் மனேதிடம் அவனுக்கில்லாமல் இருந்தது. விஷயங்கள் அவன் கண்ணுக்கு எப்படிப் புலப்பட்டனவோ அப்படியேதான் அதை அவன் ஏற்றுக்கொண்டான். எனவே, அவன் இயற்கைக்கு அதீதமான சில சக்திகளில் நம்பிக்கை கொண்டுவிட்டது சகஜந்தான். தன்னைச் சுற்றி ஆபத்துக்களும், தீமைகளும் சூழ்ந்துகொண்ட காலத்தில் கண்ணினுல் காணமுடியாத சக்திகளின் துணையை அவன் பல வழிகளிலும் நாடினுன். அவனுடைய சந்ததியார்களும் அவன் வழியைப் பின்பற்றினுர்கள். எனவே, யுக யுகாந்தரமாக அநேக நாடுகளில் கோடிக் கணக்கான ஜனங்கள்—அவர்களிலே அன்பு நிறைந்தவர்களும் புத்திசாலிகளுங்கூட இயற்கைக்கு அதீதமானதொரு சக்தியின் துணையை நாடினுர்கள். எண்ணிறந்த பலி பீடங்களும் கோயில்களும் கட்டப்பட்டன. இங்கேயே மேற்கண்ட அமானுஷ சக்திகள் பலிகளாலும், பாடல்களாலும் பூஜிக்கப்பட்டன. உபவாசம், சடங்கு, பிரார்த்தனை முதலியவைகளால் உபாசிக்கப்பட்டன.

ஒவ்வொரு யுகத்திலும் மனிதனுடைய அறிவானது நிதானமாகவும் ஆனுல் பல சங்கடங்களுக்குட்பட்டும் அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது. பின்னர், நாளாவட்டத்தில் மனிதனுடைய தேக பலத்திற்கு மனே பலம் துணையாக வந்து சேர்ந்தது. மனிதனுடைய உழைப்புச் சக்திக்கு அவனுடைய சிந்தனை சக்தி நண்பனுக வந்து சேர்ந்துகொண்டது. மனிதன் தன்னுடைய கைகளையும் மூளையையும் கூட்டாளிகளாக்கி வேலை செய்வதன்மூலம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைகிருனே அதே விகிதாசாரப்படி அவனுடைய உழைப்பில் சிந்தனை சக்தியின் கலப்பும் முன்னேற்றமடைகிறது. இவையெல்லாம் அனுபவத்திஞலேற்பட்ட பலன்கள்.

பிரக்ருதி தேவதை இருக்கிருளே அவள்—அந்த இயற்கை அன்னை—சில சமயங்களில் தாராள மனப்பான்மையுடனிருக்கிருள்; இன்னும் சில சமயங்களில் இதயமற்றவளாகிவிடுகிருள்; சில சமயங்களில் டாம்பீகமாக தன்னை வெளிப்படுத்திக் கொள்கிருள்; வேறு சில சமயங்களில் மகா லோபியாக நடந்துகொள்கிருள். அவள் மனிதருடைய தாயாகவும், ஆசிரியையாகவும் எப்படி இருக்கிருளோ அப்படிப்போலவே மனிதர்களை ஏமாற்றுபவளாகவும் அவள் இருக்கிருள். அவளுக்கு மேலே நாம் உயரமுடியாது; அவளுக்குக் கீழே நாம் வீழவும் முடியாது. இந்த உலகத்திலேயுள்ள எல்லா நன்மைகளுக்கும், எல்லாத் தீமைகளுக்கும் அவள்தான் வித்து, அவள்தான் மண். சிருஷ்டிக்கிறவளும் அவள்தான்; போஷிக்கிறவளும் அவள்தான்; காப்பாற்றுபவளும் அவள்தான்; அழிக்கிறவளும் அவள்தான்.

நல்ல காரியங்கள் நல்ல பலனைத் தருகின்றன. அவைகளிலிருந்து நல்ல விதைகள் தோன்றுகின்றன. அந்த விதைகளிலிருந்து நல்ல பழங்கள் உண்டாகின்றன. அது போல நல்ல எண்ணங்கள் சிதைவு படாமல்

வழி வழியாக வந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்போல அன்பான வார்த்தைகளுங் கூட இந்த மண்ணிலிருந்து மறைந்து போவதில்லை.

ஒவ்வொரு மனிதனுடைய மூளையும் ஒவ்வொரு விளைநிலம். அதில் இயற்கை அன்னை எண்ண விதையை விதைக்கிறாள். அதிலிருந்து கிடைக்கிற சாகுபடி அந்த நிலத்தின் செழுமையைப் பொருந்தியிருக்கிறது.

தவழ்ந்துசெல்கிற காற்றிற்கு தனது நறுமணத்தை அளிக்கும் ஒவ்வொரு புஷ்பமும் மனிதனுடைய ஆத்மாவில் முத்திரையிட்டுச் செல்கிறது. ஆகாயத்தில் பக்ஷிகள் வட்ட மிடுவதும் கீழே வேகமாகப் பாய்ந்து இறங்குவதும், நுண்ணிய கலையானது கோடிட்டுச் செல்வதையே குறிப்பிடுகின்றன. ஓய்வு கொள்ளாத சமுத்திரத்தின் கர்ஜனையும் முணுமுணுப்பும் நீர் வீழ்ச்சியின் பய பக்தியோடு கூடிய கீதமும் இடியின் பெருங் குரலும் சிற்றோடையின் சலசலப்புச் சப்தமும், இலைகளின் ரகசியப் பேச்சும், பக்ஷிகளின் மனோ ரஞ்சகமான காதற் பாட்டுகளும், காற்றின் பெருமூச்சும் இவையெல்லாம் மனிதனுக்குக் கவி பாட கற்றுக் கொடுத்திருக்கின்றன. அவன் தன் ஹ்ருதயத்திலிருந்து கவியைப் பொழிகிறான். இது மட்டுமா? மேற் கண்டவை துன்பத்திற்கும் நம்பிக்கைக்கும், காதலுக்கும் மரணத்திற்கும் ஒரு குரலை அளித்திருக்கின்றன.

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும், மலைத் தொடருக்கும், சமதரைக்கும் வளைந்து செல்லுகின்ற ஆற்றிற்கும், மணல் நிறைந்த பாலைவனத்திற்கும், மேகங்களுக்கும், நக்ஷத்திரங்களுக்கும், பனிக்கும், மழைக்கும், அமைதிக்கும், புயற்காற்றிற்கும், இரவிற்கும், பகலிற்கும், காடுகளுக்கும் கணவாய்களுக்கும், வெளிச்சத்திற்கும், பலவித வர்ணங்களுக்கும் எல்லாவற்றிற்கும் வளர்ச்சி, வாழ்வு, தாழ்வு, மரணம் ஆகிய அனைத்தும் உண்டு. பறப்பன, மிதப்பன, நீந்துவன, அசைவன ஆகிய எல்லாவற்றிலும், பொருள்களின் உருவங்களிலும் தன்மைகளிலும் மனிதன் தன் எண்ணத்தின் விதைகளையும் சின்னங்களையும் காண்கிறான். கடைசியில் மனிதனால் செய்யப்பட்ட யாவும் இயற்கையோடு இயைந்ததாகவே ஆகிவிடுகிறது. இதுவே வருங்கால சந்ததிகளில் ஒழுங்கான வாழ்வை அமைத்துக்கொடுக்கிறது. கிரேக்கர்கள் சமைத்த உருவச் சிலைகள், பாட்டின் இன்னிசைபோல் பூரணத்துவம் பெற்றதாய் வாழ்க்கையின் இனிமையைத் தெரிவிக்கின்றன. காவியங்கள், ஓவியங்கள், கற்பிதங்கள், சித்தாந்தங்கள், தத்துவங்கள் இவையெல்லாம் மனிதனுடைய ஹ்ருதயத்தை விசாலப்படுத்தியும், பண்படுத்தியும் இருக்கின்றன. இவை யாவும் இயற்கையானவை. இயற்கையிலிருந்தே இவை உண்டானவை. அந்த இயற்கையின் எல்லையைத் தாண்டி மனிதன் செல்லவேமுடியாது.

ஆயினும் மனிதன் அநேக நூற்றாண்டுகளாக, அமானுஷ்யமான சக்திகள் இருக்கின்றனவென்று நம்பினான்; உண்மையாகவே நம்பினான்; அவற்றை ஆதாரமாகக் கொண்டான். அவன் இயற்கையின் நியதியிலே நம்பிக்கை கொள்ள

வில்லை; காரண காரியங்களைப்பற்றியும், இயற்கைச் சக்தியின் அமரத்துவத்தைப்பற்றியும் அவன் அறிந்து கொள்ளவில்லை.

வைத்திய விஷயத்தில் அவன் மணி மந்திரங்களை நம்பினான். வியாதிகள் உண்டாவது இயற்கைதான் என்பது அவனுக்குத் தோன்றவேயில்லை.

ரஸாயன விஷயத்தில் அவன் ஜீவாமிருதத்தையும், ரஸவாதத்தையும் நாடி ஓடினான். தாழ்ந்த உலோகங்களை தங்கமாக்க அவன் ஏதேனும் ஒரு வழி அகப்படுமா என்று அலைந்து கொண்டிருந்தான்.

யந்திர விஷயங்களில் அவன் அந்த யந்திரங்கள் சதா ஓடிக்கொண்டிருக்க ஏதேனும் ஒரு மார்க்கமுண்டா என்று தேடினான், எப்படியாவது அந்த யந்திரத்தின் கருவிகள் ஒன்று சேர்ந்து ஒரு சக்தியை உண்டுபண்ணாதா என்று அவன் பார்த்தான்.

அரசாங்க விஷயத்தில் அவன் அதிகாரசக்தியின் அடிப்படை, அமானுஷ சக்தியின் இச்சையிலேயே இருப்பதாகக் கருதினான்.

நூற்றாண்டுகள் கணக்காக மனிதன் ஒழுக்கத்தைப் பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராய மென்னவென்றால், இயற்கைக்கு மேம்பட்டதொரு சக்திக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதுதான். இயற்கை உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டு மென்பது அவன் எண்ணமாயிருக்க வில்லை. இத்தனை வருஷங்களாக, மதம் என்பதற்கு கண்ணுக்குப் புலனாகாததும், எல்லை யற்றதும், அதிகமானதும், அமானுஷத் தன்மை வாய்ந்ததுமான சக்திகளை வணங்குவதுதான் என்று கருதப்பட்டு வந்தது.

அநுபவ மூலமாக, பரிசோதனையின் விளைவாக, யதேச்சையாகக் கூட, இயற்கைச் சாதனங்களைக் கொண்டு அநேக வியாதிகளைக் குணப்படுத்த முடியும் என்பதைக் கண்டு கொண்டான். இலை தழைகளைக் கொண்டு, மரப்பட்டைகளைக் கொண்டு அநேக நோய்கள் குணமடையும் என்பதைத் தெரிந்து கொண்டான்.

இங்கிருந்துதான், மனிதன் அறிவுத் துறையில் பிரவேசிக்க ஆரம்பித்தான் என்று சொல்ல வேண்டும். நாளா வட்டத்தில், இயற்கைக்கு அநுசரணையாக அவனுடைய நம்பிக்கை வளர்ந்து வந்தது. ரட்சைகள், தாயத்துகள் முதலியவைகளிடத்தில் அவன் கொண்டிருந்த நம்பிக்கை குறைந்து விட்டது. இந்த நம்பிக்கை குறைவதற்காக, மனிதன் எவ்வளவோ காலம் போராட வேண்டியிருந்தது. கடைசியில் இயற்கைக்குச் சாதகமான சக்திகளே வெற்றி பெற்றன. இப்பொழுது நமக்குத் தெரிகிறது, இயற்கையினாலேயே எல்லா வியாதிகளும் உற்பத்தியாகின்றன வென்று. அப்படியே, எல்லா வியாதிகளையும் இயற்கைக்கு அநுசரணையான முறைகளைக் கொண்டே குணப்படுத்தலா மென்பதை இப்பொழுது தெரிந்து கொண்டிருக்கிறோம். கணித சாஸ்திரத்தில் ஏதேனும் ஒரு பிரச்னையைத் தீர்க்க வேண்டுமானால் எப்படி தாயத்துகள், ரட்சைகள் முதலியன பயன்படாதோ

அதைப் போல், வியாதிகளைக் குணப்படுத்துகிற விஷயத்திலும் மேற்படி ரட்சைகள், தாயத்துகள் முதலியன பயன்படா. அமானுஷ்யமான பரிகாரங்கள் ஒன்றும் இல்லையென்பது இப்பொழுது நமக்குத் தெரிந்திருக்கிறது.

ரசாயன சாஸ்திர விஷயத்திலும், மனிதன் அநேக காலம் அறியாமையோடு போராடவேண்டியிருந்தது. இப்பொழுது நாம் தேவாமிருதத்தையோ அல்லது மந்திர மணிகளையோ நாடி ஓடுகிறோமில்லை. ரசாயன விஷயத்தில், அமானுஷ்யமானது ஒன்றுமில்லையென்பதை இப்பொழுது தெரிந்துகொண்டிருக்கிறோம். எல்லாப் பதார்த்தங்களும் அவ்வவற்றின் இயற்கைக்கு ஏற்றாற்போலிருக்கின்றனவென்பதையும் பல அணுக்கள் ஒன்று சேரக் கூடுமென்பதையும் இப்பொழுது நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம். அற்புதங்கள் என்பது இப்பொழுது ரசாயனத்தைப் பொறுத்த மட்டில் இல்லை. அப்படியே விஞ்ஞான சாஸ்திர விஷயத்திலும் கண் கட்டு வித்தைகள் ஒன்றுமில்லையென்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறோம். இயற்கை எப்பொழுதும் ஒரேபடித்தாக இருந்துகொண்டிருக்கிறதென்பதையும்; ஆகிர்ஷண சக்தி யென்பதும் அப்படியே ஒரு படித்தாக இருக்குமென்பதையும், ஒரு வட்டத்தின் குறுக்களவும் சுற்றளவும் உள்ள சம்பந்தம் எப்பொழுதும் மாறுபடாதென்பதும் இப்பொழுது நமக்குத் தெரிகிறது.

யந்திர அபிவிருத்தி விஷயத்தில் கூட, இயற்கைதான் முன்னணியில் வந்துநிற்கிறது. மனிதன் எப்படி ஒரு சக்தியை உற்பத்தி செய்ய முடியாதோ அப்படியே ஒரு சக்தியை மனிதனால் அழிக்கவும் முடியாது. யந்திரத்தை ஓட்டுகிற எவனும் அமானுஷ்யமான சக்தியொன்றின் துணையை எதிர்பார்த்து தன் யந்திரத்தை இயக்குகிறானில்லை. எந்தச் சக்தியினாலும் மாற்றமுடியாத சில உண்மைகளை வைத்துக்கொண்டு அவன் வேலை செய்கிறான்.

ஆகையால் அமெரிக்காவிலுள்ள நாம், ஆட்சி புரியும் அதிகாரம், சட்டங்களை இயற்றி நடைமுறையில் கொணரும் அதிகாரம் முதலியன ஆளப்படுவோருடைய சம்மதத்தினின்றுமே உண்டாகின்றனவென்றும், அமானுஷ்யமான சக்தி எதனின்றும் உண்டாகவில்லையென்றும் தெரிந்துகொண்டிருக்கிறோம். அமானுஷ்யமான சக்தியொன்றின் ஆணைக்குட்பட்டு, அரசன் சிங்காதனத்தில் வீற்றிருக்கிறான் என்பதை நாம் இப்பொழுது நம்புவதில்லை. அப்படியே, அமானுஷ்ய சக்தியினுடைய ஆணைக்குட்பட்டே மற்றவர்கள் பிரஜைகளாகவோ அடிமைகளாகவே இருக்கிறார்களென்பதையும் நாம் நம்புகிறோமில்லை.

எனவே, தர்மம், நியாயம் என்பவைகள் சம்பந்தமாக நாம் கொண்டிருந்த எண்ணங்கள் இப்பொழுது மாறுபட்டிருக்கின்றன. எவையெவை மனிதர்களுக்குச் சந்தோஷத்தையும் நன்மையையும் உண்டுபண்ணுகின்றனவோ அவை யாவும் தர்மமானவை, நியாயமுள்ளவைதான், தர்மத்தின் சாரம், கண்மூடித்தன

மாகக் கீழ்ப்படிவதல்ல. அப்படிக் கீழ்ப்படிவது மனிதனுடைய மனம் அடிமைப்பட்டிருக்கிறதென்பதையே காட்டுகிறது. பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வகையில் கீழ்ப்படிய வேண்டுமென்றால் அது வேறு விஷயம். அதை விடுத்து எதற்கெடுத்தாலும் கீழ்ப்படிகிற சுபாவத்தை நாம் கைப்பற்றினோமானால், அஃது அடிமைக் குணந்தான், ஆனால் உண்மையான தரும ஒழுக்கம் என்பது சுதந்திரத்தின் மலர்; ஞானத்தின் பழம்,

அமானுஷ்ய சக்திக்கும் மதத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்பதை இப்பொழுது நம்மில் பலர் தெரிந்துகொண்டிருக்கின்றனர். ஆதாரமில்லாமல் நம்புவதோ, ஆதாரத்திற்கு விரோதமாக நம்புவதோ மதமல்ல. தெரியாத ஒன்றைவணங்குவது, அல்லது எல்லையற்ற பரம்பொருளை உத்தேசித்து ஒன்றைச் செய்வது என்பதும் மதமல்ல, சடங்குகள், பிரார்த்தனைகள், அற்புதங்கள் முதலியனவற்றிற்கும் உண்மையான மதத்திற்கும் சம்பந்தமேயில்லை.

ஒவ்வொரு சாஸ்திரமும், இயற்கையென்கிற ஆதாரத்தின்மீது, உண்மை என்கிற ஆதாரத்தின்மீது நிலவுகிறது. ஆகையால், தருமமும் மதமும், இயற்கையையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்றன.

நமது பிரதிநிதி

ஸ்ரீமான் எஸ். ஏ. சின்னையாத் தேவர் அவர்கள், "ஜோதி"யின் பிரதிநிதியாக பர்மாவில் மியாங்மியா ஜில்லாவிலும், அதனையடுத்த இடங்களிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்துவருகிறார். அவருக்கு அன்பர்கள், எல்லாவித ஆதரவுகளையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

—"ஒரு காங்கிரஸ்வாதி"

பண்டித ஜவஹர்லால் நேரு

நாற்பத்தோன்பதாவது காங்கிரஸ் தலைவர்.

"எவனொருவன் நன்மையேற்பட்டாலுஞ் சரியே, அல்லது தீமையேற்பட்டாலுஞ் சரியே, இவைகளைப்பற்றி யெப்பொழுதும் கவலையற்றவனாய், சந்தேகமில்லாமலிருக்கிறானோ, துவேஷமோ, அல்லது சந்தோஷமோ கொள்ளாமலிருக்கிறானோ அவனே ஸ்திதப் பிரக்ஞனாகும்"

இது கீதா வாசகம். நம்முடைய தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு கர்ம வீரர். நம்முடைய பாரத தேசத்தின் சுதந்திரத்திற்காக அல்லும் பகலும் உழைப்பவர். ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் அவருக்கு பாரத தேசத்தின் விடுதலையேதான் சிந்தனை. 1922ம் வருஷம் கைதி செய்யப்பட்டு அதே வருஷம் மே மாதம் 17ந் தேதி அவர் கோர்ட்டார் முன்னிலையில் கூறிய வாசகங்கள் இவை; "நான் ஒரு பாக்கியவானென்றே கருதுகிறேன். இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைத்திருப்பதற்கு எனக்கு நானே பெருமைகொள்ளுகிறேன். சுதந்திர யுத்தத்திலே நான் பிறந்த என்னுடைய பாரத தேசத்திற்கு சேவை செய்வது பெரிய பாக்கியகரமான விஷயம். அதுவும் மகாத்மா காந்தியடிகளைப்போன்ற ஒரு பெரிய மகானுடைய தலைமையின் கீழ் சேவை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பது பெரிய பாக்கியமாகும். தான் பிறந்த தேசத்திற்காக கஷடங்களைச் சகித்துக்கொள்வது சிறிய விஷயமா என்ன? இந்த பாரத தேசத்திலே பிறந்த யாராமொருவருக்கும் இதைப் பார்க்கிலும் சௌபாக்கியமான காரியம் வேறுண்டோ? கௌரவம்பொருந்திய தன்னுடைய லட்சியம் சித்தியடைவதற்காக உயிரையும் திரணமாக மதித்துச் சேவைசெய்வது எவ்வளவு உயர்ந்த காரியம்" என்று கூறினார்.

1929ம் வருஷம் லாகூரிலே நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையின் தலைவராக நமது ஜவஹர் தெரிந்தெடுக்கப்பட்டபோது, மகாத்மா காந்தியடிகள் என்ன கூறினார்

தெரியுமா? "வீரத்திலே அவருக்குச் சமதையாக யாரையும் சொல்ல முடியாது. தேச பக்தியிலே அவருக்கிணை அவரேதான். சிலபேர், அவர் ஒரு தந்திரக்காரரென்றும், இதய பலமில்லாதவரென்றும் கூறுகிறார்கள். இது சந்தர்ப்பத்தை அனுசரித்த அவருடைய குணங்களாகும். ஒரு வீரனுக்குள்ள முற்போக்கும், சஞ்சலமும் எப்பொழுது அவரிடத்தில் காணப்படுகின்றனவோ அப்பொழுது அவருடைய மேலான ராஜதந்திரம் பிரகாசிப்பதைக் காணலாம். தூய்மையான—களங்கமற்ற மணியைப் போன்ற புனிதத் தன்மை நிறைந்தவர் ஜவஹர். அவருடைய உண்மைத் தன்மை சந்தேகத்திற்கு இடமில்லாதது. அவர் அஹிம்ஸையை அனுஷ்டிப்பவர். கட்டுப்பாட்டுக்குட்பட்ட சிப்பாய். பாரத தேசம் அவருடைய கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் மகாத்மா. மகாத்மா காந்தியடிகள், பிறருடைய உள்ளத்தின் ஆழத்தை அறிவதில் பெரிய நிபுணர் என்பது அறிஞர்களுடைய அபிப்பிராயமல்லவா?

1889ம் வருஷம் நவம்பர் மாதம் 14ந் தேதி அலகாபாத்தில் ஸ்ரீமதி சொரூப ராணியாருடைய புத்திரராக நமது ஜவஹர் பிறந்தார். இவருடைய தந்தை பண்டித மோதிலால் நேருவினுடைய முதல் மனைவியார் மறித்து விட்டார்; தலைக் குழந்தையொன்றும் இறந்திருந்த காலம். கேட்க வேண்டுமோ! பண்டித மோதிலாலுக்கும் ஸ்ரீமதி சொரூபராணிக்கும் கண்ணுண் மணியாய்த் திகழ்ந்தார் நமது ஜவஹர். ஏன், அந்தக் குடும்பம் பூராவுக்குமே அவர் "செல்லப் பிள்ளை." இளம் ஜவஹர் செய்யும் அத்தனை காரியங்களும் அவர்களுக்குப் பரம திருப்தியாயிருக்கும். அந்தக் காலத்திலே ஜவஹரிடத்தில் ஒரு விசித்திரமான குணமுண்டு. ஆனந்தமாகத் துள்ளிக் குதித்து விளையாடுவார்; திடீரென்று அழ ஆரம்பித்து விடுவார். அவர், சிரிப்பதற்கும், அழுவதற்கும் இடையே வெகு நேரமிராது. சிரித்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஜவஹர், யாதொரு காரணமுமில்லாமல் அழ ஆரம்பித்து விடுவார். இப்படி அழுவதற்கு யாராயினும் காரணங் கேட்டால் குழந்தை ஜவஹருடைய அழுகைதான் இன்னும் ஜாஸ்தியாகும். இன்னும், அவ்விதம் கேட்டவரையே சுட்டிக் காட்டி, "இவன்தான் என்னை அடித்தான்" என்பார். அடுத்த ஒருவர் கேட்டால், அவரைச் சுட்டிக் காட்டி, இவன்தான் என்னை அடித்தான் என்பார். இவ்விதம் எத்தனை பேர் மாறி மாறிக் கேட்டாலும் அத்தனை பேரையும் சுட்டிக் காட்டி, இவன்தான் என்னை அடித்தான், இவன்தான் என்னை அடித்தான் என்று சொல்லிக் கொண்டு போவதில் சலிப்புக் காட்ட மாட்டார். இந்த விநோதத்தைக் கண்ட யாவரும் சிரித்துப் பூரிப்பார்கள். இப்பொழுதுங் கூட ஜவஹர், ஒருவரைக் கோபித்துக்கொண்டாரானால், அடுத்த நிமிஷமே கடகடவென்று சிரித்து விடுவதைப் பார்க்கலாம்.

செல்வப் பிள்ளையாகிய ஜவஹருடைய பராமரிப்பும் மிகவும் செல்வமாகவே நடைபெற்றதென்பதைச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? ராஜபோகம் நிறைந்தது பண்டித மோதிலாலுடைய குடும்பம். குழந்தை

ஜவஹருக்குக் குறையேது? அவருடைய போஷிப்புக்காக ஆங்கிலத் தாதிமார் வைக்கப்பட்டனர். அவருக்குப் படிப்பிக்க ஆங்கில உபாத்தியாயர்கள். அவர், படிப்பதும் வீட்டிலேதான்; விளையாடுவதும் வீட்டிலேதான். அதிகமாக அவரை வெளியே காணமுடியாது. பந்தடிப்பதிலும், குதிரைச் சவாரி செய்வதிலும், வீட்டிலேயுள்ள சிறிய குளத்திலே நீந்தி விளையாடுவதிலும் அவருக்குப் பரம சந்தோஷம். வீட்டிலேயே அவருக்கு ஆரம்பப் படிப்பு நடைபெற்றது. மேனாட்டு நாகரிக முறையில் அவர் வளர்க்கப்பட்டாலும் ஐந்து வயதில் பழைய வழக்கப்படி அவருக்கு வித்தியாரம்பம் செய்யப்பட்டது.

நம்முடைய தலைவராய் விளங்கும் ஜவஹர்லாலிடத்தில் இன்று நாம் என்னென்ன உயர்ந்த குணங்களைக் காண்கிறோமோ, அவைகளெல்லாம் அவருடன் பிறந்த குணங்களாகும். இளமையிலேயே அவருடைய முகம் மிகவும் கம்பீரமாயிருக்கும். ஆனால் அந்தக் கம்பீரத்திலே ஒரு ஆனந்தமான சாந்தி தவழும். அவருடைய கண்கள் மிகுந்த பிரகாசமானவை. கூர்ந்த பார்வை. தாம் எந்த ஒரு காரியத்தைச் செய்வதென்று தீர்மானித்துவிட்டாரோ அதைச் செய்தே தீரும் சுபாவம் ஜவஹருக்கு இளமையிலேயே உண்டு. சண்டையென்றால் அவருக்கு ருசி என்றுகூடக் கூறலாம். சண்டைக்குப் பின்வாங்குபவரல்ல நமது தலைவர் ஜவஹர்.

ஒரு லட்சிய புருஷராய், பண்டிதர் இன்று உலகில் துலங்குவதற்கு முக்கிய காரணஸ்தரா யிருந்தவர் அவருடைய இளமைக்கால ஆசிரியர், எப். டி. ப்ரூக்ஸ் என்னும் ஆங்கில அறிஞராகும். மேனாட்டு நாகரிகத்திலே, போக விலாசம் பொதிந்த ஆனந்த பவனத்திலே, அரச வைபவத்தோடு வாழ்ந்த பண்டித மோதிலால் நேருவினுடைய புத்திரர், அதுவும் அருமைப் புத்திரர் ஜவஹருடைய வாழ்க்கையில் இளமையிலேயே ஒரு பெரிய மாறுதலேற்பட்டது, பாரத தேசத்தின் பாக்கியமென்றே சொல்லவேண்டும்"........... எவ்வளவிருந்தாலும் இந்தியாவிலே, மகாத்மா. காந்திபடிகளுக்குப் பின் செல்வாக்கு நிறைந்த தலைவர் பண்டித ஜவஹர்தான்" என்று சுபாஷ் சந்திர போஸ் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார். ஆம், நமது ஜவஹர், பாரத தேசத்து மக்களின் இதயத்தில் ஸ்திரமான இடம் பெற்றுவிட்ட தலைவரல்லவா?

வீட்டிலேயே, ஆங்கிலம், ஹிந்தி, உருது, கொஞ்சம் சமஸ்கிருதம் கற்றுக் கொண்டிருந்த ஜவஹரை மேனாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்க வேண்டுமென்று மோதிலால் விரும்பினார். ஆனால் தம்முடைய அருமைப் புத்திரனை, அதுவும் 15 வயது கூடப் பூர்த்தியாகாத தமது மைந்தனைத் தனிமையாக மேனாட்டுக்கு அனுப்புவதற்குத் தந்தையாருடைய மனம் துணிவு கொள்ள வில்லை. இதனால் 1904-5ம் வருஷத்தில் ஜவஹரைப் படிக்க வைப்பதற்காக, மோதிலாலுடைய குடும்பம் பூராவுமே மேனாட்டுக்குப் பயணமாயிற்று. சிறிது காலம் மேனாட்டில் யாத்திரை செய்த பின்னே, இங்கிலாந்து, ஹாரோ காலேஜில் நமது ஜவஹர் சேர்க்கப்

பட்டார். ராபர்ட் பீல், ஸ்பென்னர், பர்சிபேல், ஸ்டான்லிபால்டுவின் முதலிய கியாதி வாய்ந்த மந்திரிமார்களும், ஷெரிடன், பைரன் ஆகிய கவிதிலகங்களும் இந்த ஹாரோ கலாசாலையின் மாணவர்களே மேனாட்டிலே கல்வி கற்பதென்றால் பணச் செலவைப் பற்றிக் கூறத் தேவையேயில்லை. ஆனால் பண்டித ஜவஹருடைய படிப்புக்காக, மோதிலால், பணத்தைத் தண்ணீரைப் போன்றே செலவு செய்தார். 1907ம் வருஷம் இன்டர்கிளாஸில் தேறிய பின் ஜவஹர் கேம்பிரிட்ஜ் கலாசாலையில் சேர்ந்து பி. ஏ. பாஸ் செய்தார். படிப்பில் இவருடைய யோக்கியதையைத் தெரிந்து, பரீட்சையேயில்லாமல் இவருக்கு எம். ஏ. ஆனர்ஸ் சர்டிபிகெட் கொடுக்கப் பட்டது. காலஞ்சென்ற ஸ்ரீ, ஷெர்வானி, ஸர். சுலேமான், க்வாஜா அப்துல் மஜீத், டாக்டர் மகமத், டாக்டர் கிச்லு இவர்கள் இவருடைய கேம்பிரிட்ஜ் கலாசாலைத் தோழர்கள். 1912ம் வருஷம் பாரிஸ்டர் பரீட்சையில் தேறிய ஜவஹர் அதே வருஷம் ஜூன் மாதம் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

1916ம் வருஷம் பண்டித ஜவஹருக்கு விவாகம் ஆயிற்று. இவருடைய மனைவி ஸ்ரீமதி கமலா, டில்லியில் ஒரு பிரபலமான குடும்பத்துப் பெண். 1917ம் வருஷம் இவர்களுக்கு இந்திரா பிறந்தாள். இந்திராவுக்குப் பின் இவர்களுக்கு மூன்று குழந்தைகள் ஜெனித்தனவாயினும் அவைகள் ஜீவித்திருக்கவில்லை. வக்கீல் தொழிலுக்குரிய பட்டத்தைப் பெற்ற ஜவஹருக்கு அந்தத் தொழிலில் இயற்கையான ஒரு ருசி இல்லாமல் போனது அதிசயமானதுதான். இதனால், 1920ம் வருஷம், தன்னுடைய பாரிஸ்டர் தொழிலை பாரத தேசத்தின் பாதாரத்திலே உதறியெறியும்வரை தன்னுடைய தந்தையாருடன் மேல்போக்காகத் தொழிலை நடத்தி வந்தார். இந்தக் குணம் இவருக்கிருந்தமையால் இவர் ஒரு பிரபலமான வக்கீலாக பெயரெடுக்க முடியாது போயிற்று. ஆனால் அடிமை இந்தியாவுக்கு பிரபலமான பாரிஸ்டரைப் பார்க்கிலும் உறுதியுள்ள தலைவரல்லவா தேவை! ஆங்கில நாகரிகத்தில் திகழ்ந்த ஜவஹர் இந்தியாவுக்கு வந்ததும் காங்கிரஸ் மகா சபையில் தொடர்புகொள்ள ஆரம்பித்தார். சுதந்திர தேசத்திலே தன்னுடைய இளமைக் காலத்தைக் கழித்த ஜவஹருடைய இதயம் அடிமை இந்தியாவைப் பார்த்து எப்படிப் புழுங்கியிருக்குமென்பதை வாசகர்கள் அறிவார்கள். இதயத் துடிப்புள்ள ஜவஹருக்கு மகாத்மா வழி காட்டினார். தேசத்திற்காக, ஆம், தன்னையீன்ற பாரத தேசத்தின் விடுதலைக்காக தன்னுடைய சகலத்தையும் துறந்தார் ஜவஹர். அதுமட்டுமோ? ராஜ போகத்திலே மூழ்கியிருந்த தன்னுடைய தந்தையாரையும், ஏன், தம்முடைய குடும்பம் பூராவையுமே பாரத தேசத்தின் சேவையிலே இறங்கும்படிச் செய்தார். தேச சேவையில் அவர் குதித்துவிட்ட அந்தக் காலத்திலிருந்து இதுவரை அவருடைய வாழ்நாளில் பெரும் பாகம் ஜெயிலில் வாசமாகவே கழிந்திருக்கின்றது. ஆனால், இதில் அதிசயப்படுவதற்கென்ன இருக்கிறது? அடிமை நாட்டிலே பிறந்த யாரொருவருக்கு, அந்தப் பொல்லாத "தேச

பக்தி" யிருக்கிறதோ அவர்களுக்குச் சிறைவாசத்தைத் தவிர்த்த சன்மானம் வேறென்ன கிடைக்கக்கூடும்? சரித்திரமல்லவா இது.

நமது ஜவஹர் மூன்று முறை காங்கிரஸ் மகாசபையின் தலைவராயிருந்திருக்கிறார். இந்தக் காலத்தில் இவர் இந்தியா பூராவும் பிரயாணம் செய்திருக்கிறார். கால்நடையாகக்கூட பல கிராமங்களுக்கு சென்று அங்குவாழும் ஜனங்களின்—ஏழைகளின் உள்ள நிலைமையை நேரில் தெரிந்திருக்கிறார். நம்முடைய தேசமானது அரசியல் சுதந்திரம் அடைந்துவிட்டால்மட்டும் போதுமென்பது இவருடைய எண்ணமன்று. பொருளாதாரத் திருஷ்டியுடனேயே அவர் சுதந்திரத்தை நோக்குகிறவர். சமுதாய அமைப்பையே திருத்தி அமைக்க வேண்டுமென்பது அவருடைய கொள்கை. "சுயராஜ்யத்தைப் பார்க்கிலும் வயிற்றுப் பிரச்னையே முக்கியமானது" என்று அடிக்கடி சுட்டி யெழுதியிருக்கிறார். ஆங்கிலப் பேரறிஞரான ஹாரோல்ட் லாஸ்கி ஒரு சமயம் ஜவஹரைப்பற்றி யெழுதும் போது,"...............இளம் பண்டிதருடைய ரத்தத்தில் சுயராஜ்ய உணர்ச்சி ஊறிப் போயிருக்கிறது. ஆனால் பண்டித மோதிலாலை விட, இளைய நேரு ஜவஹர் தீவிரமான மாறுதல்களை விரும்புகிறார். அவருடைய தகப்பனாரிடத்தில், அமைதியும், சமரஸ உணர்ச்சியும், பொறுமையும் ததும்பின. இவரோ கண்டிப்பும், உறுதியும் காரியத்தில் கருத்தும் உடையவராயிருக்கிறார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டித ஜவஹர்லால் நேரு எழுதிய சுயசரிதை உலகப் பிரசித்தி பெற்றது. அதை ஒரு இலக்கிய விருந்தாக அறிஞர்கள் கருதுகிறார்கள்; தங்களுக்கு வழி காட்டி பென்று இளைஞருலகம் எண்ணுகின்றது. இரண்டாவது சட்ட மறுப்புக் காலத்தில் ஜவஹர் ஜெயிலிலிருந்தார், அந்தக் காலத்தில் ஒரு சமயம் ஸ்ரீமதி கமலாவிடத்தில் ஒரு நண்பர், ஜவஹருக்கு ஜெயிலில் என்ன வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது என்று கேட்டார். "கயிறு முறுக்குகிற வேலை" என்று கமலா பதில் கூறினார். அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. துக்கம் அவருடைய தொண்டையிலிருந்து வரும் சப்த அலைகளைத் தடுத்து விட்டது. ஸ்ரீமதி கமலா, ஜவஹரைப் பிரிந்து சில வருஷங்களாகி விட்டன. நமது ஜவஹர் இப்பொழுது சிறையிலிருக்கிறார்.

புகழைக் கவனிப்போமானால் சுகம் கிட்டாது;. சுகத்தைக் கவனித்தோமானால் புகழ் கிட்டாது.

—சமர்த்தகுரு ராமதாஸ்

—வ. பார்த்தசாரதி

தன் கையே தனக்குதவி

தன்கையே தனக்குதவி' என்று நாம் எவ்வளவு சுலபமாகச் சொல்கிறோமோ அவ்வளவு சுலபமாக அதனைச் சந்தர்ப்பம் வருகிறபோது அநுஷ்டித்துக் காட்டுகிறோமில்லை. அநேக சந்தர்ப்பங்களில் நம்மை நாம் சமாளித்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் கூட நாம் மற்றவர்களுடைய உதவியை நாடுகிறோம். இதற்குக் காரணம் நமது மனோதிடமின்மைதான்.

எவனொருவனுக்கு "நம்மை நாமே சமாளித்துக்கொள்ள முடியும்" என்ற மனோ திடம் இல்லையோ அவன் வாழ்க்கையில் வேகமாக முன்னேற முடியாது. தனிப்பட்ட மனிதர்கள் விஷயத்தில் மட்டுமல்ல, தேசங்களின் விஷயத்திலும் இந்த உண்மை பொருந்தும். அதாவது எந்த ஒரு மனிதனுக்கோ எந்த ஒரு ஜாதிக்கோ தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவன் அல்லது அது வீழ்ச்சியடைய வேண்டியதுதான்.

நமது அன்றாட வாழ்க்கையில்கூட இந்த உண்மையை அநுபவரீதியாகப் பார்க்கலாமே. ஒருவன் மற்றவர்களை நம்பி ஒரு காரியத்தில் இறங்குகிறானென்று வைத்துக்கொள். நல்ல சமயத்தில் அவர்களுக்கும் இவனுக்கும் ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டுவிடுகிறது. அவர்கள் இவனை விட்டு விலகிவிடுகிறார்கள். எடுத்த காரியம் அரைகுறையாக இருக்கிறது. இவன் விழிக்கிறான். சுயமாக அந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்ய இவனுக்கு ஆற்றல் இல்லை; மனோ திடமில்லை. என்ன செய்வான்? மனச்சோர்வடைகிறான். எதிலும் ஒருவித வெறுப்புக் காட்டுகிறான். இதனால் என்ன ஆகிறதென்றால், எதற்கெடுத்தாலும் இவன் மற்றவர்களுடைய தயவையே எதிர்பார்க்க வேண்டியவனாயிருக்கிறான்.

உலகத்தில் மகான்களாகப் போற்றப்படுகிறவர்கள் அத்தனைபேரும், தங்களுடைய வாழ்க்கையின் ஆரம்பத்தில் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா? இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சுய முயற்சியினாலேயே முன்னுக்கு வந்திருக்கிறார்கள். இவர்கள், தங்களுடைய அறிவு விசேஷத்தினாலேயோ, அல்லது பிரசங்கத் திறமையினாலேயோ மட்டும் முன்னுக்கு வந்திருக்கிறார்களென்று சொல்ல முடியாது. எந்த விதமான வாழ்க்கை, உயர்ந்த வாழ்க்கை என்று தாங்கள் கருதினார்களோ அந்த வாழ்க்கையை இவர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். அப்படி நடத்திக் காட்டிய வாழ்க்கையும் உலகத்திற்கு உபகாரமாயிருந்திருக்கிறது. இதனால்தான் இவர்கள் மகான்களாகப் போற்றப்பட்டு வருகிறார்கள்.

இவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை நாம் சிறிது ஆராய்ச்சி செய்து

பார்த்தோமானால், இவர்களில் பெரும்பாலோர் ஏழைக் குடியிலேயே பிறந்தவர்களாகத் தென்படுவார்கள். அப்படிப் பிறந்தது, வாழ்க்கையிலே இவர்களுக்குப் பெரிய சாதகமாக முடிந்திருக்கிறது. ஏனென்றால், அப்பொழுதுதான் இவர்களுக்கு வாழ்க்கையின் கரடுமுரடான பாகங்களும் நன்றாகத் தெரியும். வாழ்க்கையின் நல்ல அம்சங்களைக் காண வேண்டுமென்ற ஆவலும் இவர்களுக்கு உண்டாகும்.

ஷேக்ஸ்பியர் என்கிற ஆங்கில மகா கவியைப்பற்றிக் கேட்டிருக்கிறாயல்லவா? இவன் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன்தான். இவன் தகப்பனார் கசாப்புத் தொழிலைச் செய்துவந்ததாகவும், கால்நடைகளை மேய்த்து வந்ததாகவும் சொல்கிறார்கள். இவனும் பாலியத்தில் கம்பளி நெசவுக்கு வேண்டிய நூல்களைத் தயாரித்துக் கொடுத்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. எப்படியிருந்த போதிலும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இவனுக்கு அநுபவம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் இவனுடைய நாடகங்களில் இவன் அந்தந்தப் பாத்திரமாக நடித்து எழுதி எழுதியிருக்கிறான். இந்த அநுபவங்களைப் பெற இவன் ஆதியில் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்.

[illegible] ஜான்ஸன் என்ற ஓர் ஆங்கிலப் புலவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாமல்லவா? இவன்தான் முதன்முதலாக ஆங்கிலப் பாஷையில் அகராதியைத் தொகுத்தவன் என்று சொல்வார்கள். இவன், ஆரம்பத்தில் மண் வெட்டிக் கூலி சம்பாதித்து வயிறு பிழைத்தவன். இப்படியே ஒவ்வொரு துறையிலும் புகழ்படைத்த பெரியார்கள் பலர், பாலியத்தில் அநேக கஷ்டங்கள்பட்டபோதிலும், தங்களுடைய சுய முயற்சியினால் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். தன் கையே தனக்குதவி என்ற பழமொழியில் இவர்களுக்குப் பூரண நம்பிக்கை இருந்திருக்கிறது.

ஆகையால் என் மகனே: மற்றவர்களைப்போல் நீயும் உனது மூதாதையர்களின் புகழைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதிலோ, அல்லது உனது தாய்நாட்டின் பழைய காலப் பெருமையைப்பற்றிப் பாடிக்கொண்டிருப்பதிலோமட்டும் காலங் கழித்துக் கொண்டிராதே. அதனால்மட்டும் நீ வளர்ச்சியடைய முடியாது. உனது மூதாதையர்களின் புகழும், உனது தாய்நாட்டின் பழைய பெருமையும் உனக்கு ஓரளவு வழிகாட்டியாயிருக்கலாம் அவ்வளவுதான். வாழ்க்கைப் பாதையில் நடந்து செல்லவேண்டியவன் நீயே. உன் முயற்சியைக் கொண்டுதான், நீ முன்னே செல்ல வேண்டும். ஆகையால் தன்னம்பிக்கையை இழக்காமல், வாழ்க்கைப் பாதையில் முன்னேறிச் செல்வாயாக.

யூகோஸ்லேவியாவைப் பற்றி

1914ம் வருஷ ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்னர் செர்வியா என்றும் மாண்டி நீக்ரோவென்றும் அழைக்கப்பட்ட சிறு ராஜ்யங்களையும் ஆஸ்திரியாவிலிருந்து பறிக்கப்பட்ட ஒரு சிறு பிரதேசத்தையும் சேர்த்து யூகோஸ்லேவியா என்றதொரு புதிய ராஜ்யமாக வகுத்தார்கள். சென்ற தலைமுறையின் ராஜதந்திரிகள். இதன் வடக்கெல்லை ஆஸ்திரியா ஹங்கேரி; கிழக்கெல்லை ருமேனியாவும் பல்கேரியாவும்; தெற்கெல்லை கிரீஸூம் அல்பேனியாவும்; மேற்கெல்லை அட்ரியாடிக் கடலும் இத்தலியும். இதன் விஸ்தீரணம் 96,134 சதுரமைல்; ஜனத்தொகை 1,394,000 தலைநகரம் பெல்கிரேட்,

1914ம் வருஷ மகா யுத்தத்திற்குக் காரணமாயிருந்தது எந்தச் சிறிய சம்பவமோ அதுவும் இந்த யூகோஸ்லேவியாவில்தான் நடைபெற்றது. அதாவது செர்வியா என்ற நாடு ஆஸ்திரிய ஏகாதிபத்தியத்தின் கீழ் 1914ம் வருஷம்வரையில் இருந்தது. செர்வியர்களுக்கும் ஆஸ்திரியர்களுக்கும் எப்பொழுதும் ஒருவிதமான பகைமை இருந்துகொண்டு வந்தது. இதனைத் தணிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆர்ச்ட்யூக் பெர்டிளுந்து என்ற ஆஸ்திரிய இளவரசன், செர்வியாவுக்குச் சென்றான். அப்பொழுது ஒரு செர்விய மாணவன், மேற்படி இளவரசனை ஸெராஜிவோ என்ற நகரத்தில் சுட்டுக் கொன்றுவிட்டான். இதுவே, ஐரோப்பிய மகா யுத்தத்திற்குக் காரணம். இந்த ஸெராஜிவோ நகரம் யூகோஸ்லேவியாவில்தான் இருக்கிறது.

யூகோஸ்லேவியா நாடு பல ஜாதியினரைக் கொண்ட நாடு. இதனால் பல சிக்கல்களையுடையது; ஸெர்வியர்கள், க்ரோஷ்யர்கள், ஸ்லோவேனியர்கள், ஸ்லாவியர்கள் முதலிய பல ஜாதியினர் இங்கே வசிக்கிறார்கள். இவர்களுக்குப் பரஸ்பர பகைமையும் அவநம்பிக்கையும் உண்டு. இதனால் அந்நியர்கள் இங்கு வந்து ஆதிக்கங் கொள்வதற்கு மிகவும் சாதகமாயிருக்கிறது. இந்த உள்நாட்டுப் பகைமையில் தேசிய ஒற்றுமை ஏற்படுவது இங்கு சுலபமாக இல்லை. கடைசியில் 1929ம் வருஷம் அலெக்ஸாந்தர் என்ற மன்னன், புதியதோர் அரசியல் திட்டத்தை அமைத்து ஒரு பார்லிமெண்டையும் நிர்மாணித்தான். நாட்டை ஒன்பது ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லாவின் நிருவாகத்தையும் ஒவ்வொரு மந்திரிவசம் ஒப்புவித்தான். இந்த முறை ஒருவாறு பயனளித்து வந்ததென்றே சொல்ல வேண்டும். ஆனால் க்ரோஷியர்களுக்கும் ஸெர்வியர்களுக்கும் இருந்த பரம்பரைப் பகைமையின் காரணமாக அலெக்ஸாந்தர் மன்னன் 1934ம் வருஷம் சுட்டுக் கொல்லப்பட்டான். க்ரோஷியர்களின் கிளர்ச்சியே இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது. ஆனால் அலெக்ஸாந்தர் மன்னனுடைய மரணமானது வேறொரு விதத்தில் நன்மையையுண்டுபண்ணிய

தென்று சொல்லவேண்டும். அதாவது ஜனங்களுக்குள் ஒருவிதமான ஒற்றுமை உணர்ச்சி ஏற்பட்டது. தாங்கள், பல்வேறு ஜாதியினராயிருந்தாலும் ஒரு நாட்டவர் என்ற உணர்ச்சி பெற்றார்கள். என்றாலும், சென்ற ஏழெட்டு வருஷங்களாகவே, யூகோஸ்லேவியாவில் அமைதியாக ஆட்சி முறை நடைபெறவில்லையென்றுதான் சொல்லவேண்டும்.

யூகோஸ்லேவியா சிறிய நாடாயிருந்தாலும். வியாபாரச் செழிப்பு அதிகம். மொத்தம் 58 துறைமுகங்கள் இருக்கின்றன. ஜனங்கள், சுதந்திர தாகம் மிகுந்தவர்கள். கல்வி வளர்ச்சியில் பெரிதும் சிரத்தையுடையவர்கள். ஆரம்பக் கல்வி, கட்டாயமாகவும் இலவசமாகவும் போதிக்கப் படுகிறது. இவ்வளவெல்லாம் இருந்தும், உள்நாட்டுப் பூசலினால் அந்நியர்களுடைய ஆதிக்கத்துக்கு இப்பொழுது எளிதிலே இரையாகிவிட்டார்கள்.

இந்தியாவின் கிராமங்கள் தற்போது கவனிக்கப்படுவதே இல்லை. பணங்களெல்லாம் நகரங்களிலேதான் செலவு செய்யப் படுகின்றன. கல்வித்துறையிலும் இதே தவறு செய்யப்படுகிறது. சிறிய காலேஜ்களினாலேதான் தேசமக்களை வளர்ச்சியுள்ளவர்களாகச் செய்ய முடியும்.

—ஸர். சி. வி. ராமன்.

கிரீஸைப் பற்றி

கிரீஸ், புராதனப் பெருமைவாய்ந்த ஒரு நாடு. இதன் பூர்வீகப் பெயர் ஹெல்லாஸ் என்பது. ஆனால் இது நாளாவட்டத்தில் உருக்குலைந்தும் சீரழிந்தும் போய் 1914ம் வருஷ மகாயுத்தத்திற்குப் பிறகு ஒரு சிறு நாடாக இருந்து வந்தது. ஆனால் அந்த வாழ்வுகூட இப்பொழுது அஸ்தமித்துப் போய்விட்டது.

கிரீஸின் வடக்கே யூகோஸ்லேவியாவும் பல்கேரியாவும், கிழக்கே துருக்கியும் ஏஜியன் கடலும், தெற்கேயும் மேற்கேயும் மத்தியதரைக் கடலும் இருக்கின்றன. மொத்த விஸ்தீரணம் 50270 சதுரமைல்; ஜனத்தொகை 6,204,684. தலைநகரம் ஏதென்ஸ்.

கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் பரம்பரைப் பகைமையுண்டு. இந்த இரு நாட்டாருடைய சரித்திரமும் இவர்களுடைய யுத்தங்களினால் கறைபட்டுப் போயிருக்கின்றன. இந்த யுத்தங்களினால் மேற்கு வல்லரசுகளும் அடிக்கடி கலந்திருக்கின்றன. கிரீஸிலும் பல முறை மந்திரிச்சபைகள் மாறி மாறியமைந்ததற்கும், குடியரசா, முடியரசா என்கிற பிரச்னையைப்பற்றி மாறி மாறி அபிப்பிராயம் ஏற்பட்டதற்கும் இந்த யுத்தங்களே காரணமாயிருந்திருக்கின்றன.

இருபதாவது நூற்றாண்டின் கிரீஸ் தேச அரசியலிலே, கறைபட்ட முத்திரைகளையும் பிரகாசமான முத்திரைகளையும் இட்டுச் சென்றவன் வெனிஜேலாஸ் என்ற ஒரு ராஜதந்திரி. இவன் சென்ற மகா யுத்த காலத்தில் நேசக் கட்சியினரோடு சமயம் வந்தபோது பிரிந்தும், தனக்குச் சாதகமாயிருந்தபோது சேர்ந்தும் தன் நாட்டுக்குச் செல்வாக்கைத் தேடிக்கொள்ளப் பார்த்தான். ஆனால் இதன் காரணமாக இவன் அடைந்த சாதகங்களைவிட பாதகங்களே அதிகம், இவன் அநேக சமயங்களில், பொதுஜனங்கள் இவன்மீதுகொண்ட ஆத்திரங் காரணமாக நாட்டைவிட்டு ஓடியும் போயிருக்கிறான்.

1935ம் வருஷத்திலிருந்து கிரீஸ் தேசம் முடியரசாக இருந்து வந்திருக்கிறது. ஜார்ஜ் என்பவர் மன்னராயிருந்துவருகிறார். 1940ம் வருஷம் கடைசியில் இத்தலியானது, கிரீஸ் தேசத்தின்மீது துராக்கிருதமாகப் படையெடுத்தபோது கிரேக்கர்கள் மகா வீரத்துடன் போராடினார்கள். இவர்களுடைய வீரமான எதிர்ப்பை உலகத்தினர் வியந்து பாராட்டி வந்தார்கள். ஆனால் இப்பொழுது ஜெர்மானியர்களின் பரிபூர்ண ஆதிக்கத்துக்கு கிரீஸ் உட்பட்டுவிடுமோவென்று அஞ்ச வேண்டியிருக்கிறது.